# ஜெபிப்பதற்கு கற்றுத்தாரும் கர்த்தாவே



எழுதியவர்
பாஸ்டர் ரொமேஷ் டானியல்ஸ்

# ஜெபிப்பதற்கு கற்றுத்தாரும் கர்த்தாவே

இயேசு இரட்சகர் சுவிசேஷ ஊழியங்கள் வெளியீடு

# ஜெபிப்பதற்கு கற்றுத்தாரும் கர்த்தாவே

# ஜெபிப்பதற்கு கற்றுத்தாரும் கர்த்தாவே

Copyright: 2018 Jesus Saviour Evangelical Ministries

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without the written permission of the copyright owner.
Scripture quotations are from the New International Version unless otherwise specified.

# பொருளடக்கம்

1. என் ஆவி ஒத்துழைக்கிறது, ஆனால் மாம்சம் பலவீனமாக உள்ளது. இதனை நான் எப்படி வெற்றி கொள்வது?

2. பரிசுத்த ஆவியானவர் யாவற்றையும் பார்த்துக் கொள்வார்

3. கர்த்தருக்கும் உங்களுக்கும் இடையில் மாத்திரம்.

4. உண்மையுள்ள ஊழியனாக இருத்தல்

5. பிதாவோடு உள்ள உறவு

6. அவர் நாமம் பரிசுத்தம்

7. கர்த்தருடைய ராஜ்யம் வருவதாக!

8. உங்கள் தேவைகள்

9. பாவத்தை விட்டு விலகுங்கள்

10. கசப்பை அகற்றி அன்பிலே நடக்கவும்

11. சோதனைகள்

12. சுகத்திற்காக ஜெபம் செய்வது

13. ஜெப வீரன்

14. முக்கியமான ஜெபக்குறிப்புக்கள்

15. சகல மகிமையும் அவருக்கே உண்டாவதாக

# 1.
# என் ஆவி ஒத்துழைக்கிறது, ஆனால் மாம்சம் பலவீனமாக உள்ளது. இதனை நான் எப்படி வெற்றி கொள்வது?

கிறிஸ்தவ வாழ்வின் விசுவாசப் பயணத்தில் ஜெபம் என்பது ஒரு மூலைக்கல்லாகும். இது எமது ஆவிக்குரிய யுத்தத்தில் பிசாசுக்கு எதிரான ஒரு ஆயுதமாகும். இப்புத்தகத்தை நான் எழுத பிரதான நோக்கம் உங்களை சரியான முறையில் ஜெப வாழ்கையில் வழிநடத்தி ஒரு ஜெப வீரராக மாற்றுவதே ஆகும்.

தேவனுடைய பிள்ளையாக ஜெப வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் பிரதான சவால் எமது மாம்சத்தை வெற்றி கொள்வதே ஆகும். எவ்வளவு தான் எமது ஆவிக்குரிய மனுஷன் ஜெபிக்க முயன்றாலும் அல்லது ஜெபிப்பதற்கு வாஞ்சை இருந்தாலும், எம் மாம்சம் அதற்கு ஒத்துழைப்பதில்லை.

மத்தேயு 26:41 “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளது தான் ஆனால் மாம்சமோ பலவீனமுள்ளது” என்றார் இயேசு. மேற்கூறப்பட்ட வசனமானது கெஸ்தமனே தோட்டத்தில் கூறப்பட்டது. இயேசு கிறிஸ்துவானவர் எங்களுக்காக விலையேறப்பெற்ற பலியை செலுத்த முன் அவர் ஜெபிக்கும் போது அவருடன் சேர்ந்து சீடர்களையும் ஜெபிக்க சொன்னார். அவர் ஜெபித்து வரும் போது சீடர்கள் அயர்ந்து தூங்குவதைக் காண்டார். எனவே அவர்களை நோக்கி வஞ்சிக்கப்படாமல் இருக்கும்படி ஜெபம் பண்ணுங்கள் என்று கூறி, மறுபடியும் அவர் ஜெபம் செய்யும்படியாக சென்றார். மறுபடியும் அவர் வரும் போது அவர்கள் தூங்குவதைக் கண்டு அவர்களை விட்டு மறுபடியும் அவர் ஜெபம் செய்ய சென்றார்.

எம் மாம்ச பிரகாரமான சோர்வுகள், அசதிகள், தூக்க கலக்கம் எம் ஜெப வாழ்வை தடைசெய்யக் கூடியதாக உள்ளது. மனம் ஜெபிக்க ஒத்துழைத்தாலும், மாம்சம் ஒத்துழைப்பதில்லை. நீங்கள் அமர்ந்து ஜெபம் செய்ய நினைத்தாலும், ஜெபிக்கும் போது தூக்கம் வருதல், சோர்வு அல்லது தூங்க விரும்பும்படி நினைத்தல் போன்றன பிரச்சினைகளாக வரக்கூடியன. இதனையே சீடர்கள் மத்தேயு 26:43 இல் அனுபவித்தார்கள் - “அவர் திரும்ப வந்தபோது அவர்கள் மறுபடியும், நித்திரைபண்ணுகிறதைக் கண்டார். அவர்களுடைய கண் மிகுந்த நித்திரை மயக்கமாயிருந்தது.”

சோர்வடைவது மனிதனர்களாகிய நமக்கு ஒரு இயற்கையான காரியமாகும். காரியாலய வேலை அல்லது வீட்டு வேலையினால் சோர்வு ஏற்படும் போது நாம் நினைப்பது ஓடிப் போய் கட்டிலில் பாய்ந்து குதித்து தூங்க வேண்டும் என்பதே. ஆனால் தேவனுடைய பிள்ளைகளே ஜெபம் என்பது தேவனோடு நாம்

தொடர்பாடும் முறையாகும். அவருடன் தனியாக நேரம் செலவழிப்பது மிகவும் முக்கியமான விடயமாகும். இது அவரோடு உறவை கட்டியெழுப்ப ஏதுவானதொன்றாகும். உங்கள் ஜெபமானது 5 நிமிட தூங்கும் முன், எங்கேயாவது செல்வதற்கு முன் ஜெபிக்கும் ஜெபமாகவோ அல்லது ஆசீர்வதியும் கர்த்தாவே, காத்துக்கொள்ளும் கர்த்தாவே என்றிருக்காமல் ஒரு பிதாவோடு, நண்பனோடு நடத்தும் நெருங்கிய உரையாடலாக இருக்க வேண்டும்.

சரி நாம் தேவனோடு நாம் உரையாடும் முறையை இவ்வாறு பார்போம். நாம் எம் நெருங்கிய நண்பர்களோடு சேர்ந்து அவர்களோடு மணி கணக்காக பேசும் போது நமக்கு களைப்பு ஏற்படுமா? இல்லை தானே! ஏன் என்ன காரணம்? நாம் அவர்களோடு நேரம் செலவு செய்ய அல்லது அவர்களோடு பேச கொண்டுள்ள விருப்பம் வாஞ்சையினாலேயே களைப்பு ஏற்படுவதில்லை. ஆம் பிரியமானவர்களே தேவனோடு கூட பேசவும் இதை போன்ற ஒரு விருப்பமும் வாஞ்சையும் நமக்குள் நாம் ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.

சங்கீதம் 42:1-2 படி “மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுவது போல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்து கதறுகிறது. என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது. நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?”

எனக்கு அன்பார்ந்த நண்பர்களே உங்கள் மாம்சத்தை நீங்கள் வெற்றிக்கொள்ள அல்லது மேற்கொள்ள உங்களுக்கு முதலாவதாக கர்த்தர் இயேசு மேல் தாகம் இருக்க வேண்டும். அத் தாகமானது மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுவது போல இருக்க வேண்டும். உதாரணமாக நீங்கள் பாலைவனத்தில் தொலைந்து போனால் தண்ணீர் அருந்த ஏற்படும் தாகம் போல கர்த்தர் மீது வாஞ்சை இருக்க வேண்டும். சங்கீதக்காரன் சொல்வது போல நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? என்ற ஏக்கம் இருக்க வேண்டும். உங்கள் அன்புக்குரியவர்களை, சந்திக்க திட்டம் போடும் போது உங்கள் மனதில் எவ்வாறான ஒரு பொங்கி வழியும் சந்தோஷம் ஏற்படுமோ அதேபோல் அதை விட இரு மடங்கு பொங்கி வழியும் சந்தோஷம் கர்த்தரை சந்திக்க திட்டம் போடும் போது உங்கள் மனதில் இருக்க வேண்டும். ஏனென்றால் அவரே தன் ஜீவனை கொடுத்து எம்மை இரட்சித்து வாழ்வு தந்துள்ளார். அவருடைய அன்பு என்றுமே மாறாது. அவ்வன்புக்கு எல்லை இல்லை. அவரே உங்களை நித்திய ஜீவனுடன் ஆசீர்வதிக்க கூடியவர்.

அந்த அன்பானது கர்த்தர் மேல் வரும் போது உங்கள் இதயம் சந்தோஷத்தால் பொங்கும். தாவீதுக்கும் அவ்வாறான மகிழ்ச்சியே இருந்தது! “எப்போது உம்மை காண்பேன் தேவனே? நான் உம்மில் தாகமாயிருக்கிறேன், என் சரீரம் உம் சமூகத்திலிருக்க ஏங்குகிறது.” இது தான் உங்கள் வெற்றிகரமான ஜெப வாழ்க்கையின் முதல் படியாகும். உங்களுக்கு வாஞ்சையும், தாகமும் மிகவும்

அவசியமாகும். இயேசு கிறிஸ்து மத்தேயு 22:37 இல் கூறியது போல "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக இதுவே முதலாம் பிரதான கற்பனை". ஆம் என் நண்பர்களே இவ்விதமான அன்பு கர்த்தர் மேல் இருக்கும் போது உங்கள் மாம்சத்தின் சோர்வுகள், பலவீனங்களை மேற்கொள்வது மிகவும் இலகு. எனவே இப்போது உங்களை நீங்களே ஆராயும் நேரம் வந்துவிட்டது. நான் கர்த்தரை என் முழு மனதோடு அன்பு கூறுகிறேனா? எனக்குள் அவரை அறிய வாஞ்சையும், தாகமுள்ளதா? அது உங்களை "தேவனை எப்போது சந்திப்பேன்" என்று கேட்க வைக்கின்றதா? என்பதை உங்களில் ஆராயுங்கள். ஆராய்ந்து முதலாவதாக உங்கள் வாழ்கையில் "எந்நிலையிலும் அவரையே முதலாவதாக வைப்பேன்" என்று பொறுத்தனைப் பண்ணுங்கள். உங்கள் வாழ்க்கையில் கர்த்தரே முதல்வர். குடும்பம், நண்பர்கள், கல்வி, வேலை, செல்வம், சுகவாழ்வு யாவும் இரண்டாம் நிலைதான். இதற்கென நான் மற்ற காரியங்களை உதாசீனம் செய்யவில்லை. ஆனால் உங்கள் வாழ்க்கையில் கர்த்தரே முதல் இடம் வகிக்க வேண்டும். இவ்வாறே நாம் மத்தேயு 22:37 கூறியது போல அவரை அன்பு செய்யலாம். இவ்வாறு மரிக்காத அன்பை அவர் மீது நாம் வைக்கும் போது ஜெபிக்கும் போது எம் மாம்சத்தை மேற்கொள்ள இன்னும் இரண்டு விடயங்கள் அவசியம். அதனை அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம்.

# 2.
# பரிசுத்த ஆவியானவர் யாவற்றையும் பார்த்துக் கொள்வார்

**ரோமர் 8:26 "அந்தபடியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதென்னவென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுக்களோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்."**

என் இனிய நண்பர்களே நாம் முதலாம் அதிகாரத்தில் பலனுள்ள ஜெபத்திற்கு முதல்படியாக கர்த்தர் மேல் எமக்குள்ள அன்பும், வாஞ்சையும் அதிகம் தேவை என பார்த்தோம். தேவனுடைய பிள்ளைகளே, 1 இராஜாக்கள் 18:33இல் எலியா ஒரு பலிபீடத்தைக்கட்டி, அதனிடையில் வாய்க்காலை உண்டாக்கி,விறகுகளை அடுக்கினான். விறகுகள் என்பது நெருப்பு பற்றக்கூடிய ஒரு பொருளாகும். அதனைப் போலவே நாம் கர்த்தருடைய நெருப்பைப் பற்றிக்கொள்வதற்கு விறகுகளைப் போல இருக்க வேண்டும். எப்படி நாம் தேவனின் அக்கினியால் பற்றியெரிய எம்மை ஆயத்தப்படுத்துவது? நாம் நம்மை கர்த்தருக்கு என்று பரிசுத்தமாக வாழ ஒப்படைத்து, வாழ்கையில் எந்நிலையிலும் அவரையே முதலாவதாக வைத்து, கர்த்தரை முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் அன்பு செய்யும் போது தான் கர்த்தரின் அக்கினி அபிஷேகத்தால் பற்றி எரிய நாமும் ஆயத்தமாயிருப்போம். இவ்வாயத்தம் அல்லது நியமனம் நம்மை உலகத்திலிருந்து பிரித்து முழுவதுமாக கர்த்தரிடத்தில் அர்ப்பணித்தலே ஆகும். அவரே உங்கள் வாழ்வில் எல்லாவற்றிலும் முதலிடம் பெறுவதாகும். அப்போது தேவனின் அக்கினி உங்கள் மீது இறங்கும்.

என் இனிய நண்பர்களே நீங்கள் தேவனின் அக்கினியால் பற்றியெரிய ஆயத்தமான பின் உங்கள் மாம்சத்தை மேற்கொள்ள ஒருவரின் உதவி உங்களுக்கு அவசியம். அவரே பரிசுத்த ஆவியானவர். ஆம் யோவான் 16: 5-15 கூறியபடி கர்த்தர் ஆவியானவரையே எமக்கு வாக்குத்தத்தமாக தந்துள்ளார். அவர் பரிசுத்த ஆவியானவரின் 5 செயற்பாட்டினை கூறியுள்ளார். அவையாவன

1) அவர் எம் ஆலோசகர்.

2) அவர் எம்மை பாவத்திலிருந்து மீளச் செய்பவர்.

3) அவர் எம்மை எல்லா உண்மைக்குள்ளும் வழி நடத்துபவர்.

4) அவர் இனி வருவதை அறிவிப்பவர்.

5) அவர் கர்த்தருக்கு மகிமையை அளிப்பவர்.

ஆம் நண்பர்களே ஒரு வல்லமையுள்ள ஜெப வாழ்வை வாழ பரிசுத்த ஆவியானவரே உலகில் மிகச் சிறந்த நண்பன் ஆவார். எம் மாம்சத்தை நாம் மேற்கொள்ள உதவக்கூடிய ஒருவர் பரிசுத்த ஆவியானவர். ரோமர் 8: 9-11 தெளிவாக இதைக் கூறுகிறது.

‘தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் சுவடுடையவனல்ல, மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால், சரீரமானது பாவத்தின் நிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியின் நிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்,கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலேயே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார்.ஷ’

மேற்குறிப்பிட்ட பகுதியானது பரிசுத்த ஆவியானவர் எங்களோடு வாசமாயிருப்பது அவசியம் என்பதை தெளிவுபடுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர் எம்மோடு இருப்பதனால் நாம் மாம்சத்தை மேற்கொண்டு, ரோமர் 8 : 26 படி பரிசுத்த ஆவியானவரே எமக்கு ஜெபம் செய்ய உதவி செய்கின்றார். இதனாலேயே பரிசுத்த ஆவியானர் எம் வாழ்கையில், எம் ஜெபக் குழுக்களில்,ஆலயத்தில் தேவை. நாம் சுவாசிக்கும் காற்றைவிட அவர் நமக்கு அவசியம். நீங்கள் அவரால் நிரப்பப்பட்டு, ஜெபத்தில் வழிநடத்தப்பட வேண்டும். எனவே ஒரு வல்லமையுள்ள ஜெப வாழக்கை வாழ முதலாவதாக கர்த்தர் மேல் அன்பும், வாஞ்சையும் அதிகம் தேவை. இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாழ வேண்டும். மூன்றாவதாக உங்கள் மாம்சத்தை மேற்கொள்ள தேவையான விடயத்தை அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம்.

# 3.
# கர்த்தருக்கும் உங்களுக்கும் இடையில் மாத்திரம்

**1 கொரிந்தியர் 14:2 "ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியிலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்"**

என் இனிய நண்பர்களே, பரிசுத்த ஆவியானவர் எவ்வளவு முக்கியமானவர் என்பதை நாம் கடந்த அத்தியாயத்தில் கற்றோம். இந்த அத்தியாயத்தில் பரிசுத்த ஆவியானவரின் வரன்களில் ஒன்றான அந்நிய பாஷையில் பேசும் வரன், எம் ஜெப வாழ்வில் எவ்வளவு முக்கியம் என்பதனை வெளிச்சத்திற்கு கொண்டுவரவுள்ளேன். மேற்கூறிய வசனத்தின்படி அந்நிய பாஷையில் பேசுகிறவன் தேவனிடத்தில் பேசுகிறான் என்றும் ஆவியிலே இரகசியங்களைப் பேசுகிறான் என்றும வேறு ஒருவனும் அதை அறியான் என்றும மூன்று முக்கிய கருத்துகளை நமக்கு எடுத்து கூறுகிறது. அந்நிய பாஷையானது நீங்களும் தேவனும் பேசும் பாஷையாகும். பிசாசானவனுக்கு கூட இதை அறிய முடியாது. தேவனுடைய பிள்ளைகள் ஆவியில் நிரம்பி அந்நிய பாஷை பேசும் போது எம் ஆவிக்குரிய மனுஷன் இயங்கி முன் வந்து, எம் மாம்சத்திற்குரியவைகள் சிலுவையில் அறையப்பட்டு, மாம்சம் பின் தள்ளப்படும். எனவே தான் நாம் தனிப்பட்ட முறையில் ஜெபிக்கும் போது ஆவியில் நிரப்பப்படும் போது எமக்குள்ளே ஒரு வல்லமை செல்வதைக் காணலாம். இதுவே 2 கொரிந்தியர் 2:9ம் கூறுகிறது - "என் கிருபை உனக்கு போதும், பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்". நாம் பலவீனமாயிருக்கும் போது பரிசுத்த ஆவியினாலே நாம் பலப்படுத்தப்படுகின்றோம். நாம் அந்நிய பாஷையில் பேசும் போது அப்பாஷையானது எமக்கும் தேவனுக்குமிடையிலான ஒரு தனிப்பட்ட உரையாடலாகிறது. எனவே பரிசுத்த ஆவியில் நிரம்பி அந்நிய பாஷையில் ஜெபிக்கும் போது எம் உடல் என்ன சொல்கின்றது, உணர்கின்றது என்பதை எம்மால் அறிய முடியாது. நேரம் போவதும் தெரியாது. காரணம் நீங்கள் மாம்சத்தில் ஜெபிக்காமல் ஆவியில் ஜெபிக்கிறீர்கள். இவற்றை என் சொந்த ஜெப வாழ்வின் அனுபவத்தில் சொல்கிறேன். எனவேதான் நாம் யாவரும் பரிசுத்த ஆவியின் அந்நிய பாஷை வரனை பெற்றிருக்க வேண்டும் என நான் ஜெபிக்கின்றேன்.

தேவன் மனிதனை படைத்து ஏதேன் தோட்டத்தில் வைத்த போது அவர்களை ஆவியின் வழிநடத்தலில் உரையாடச் செய்தார். ஆதாமும், ஏவாளும் மாம்சத்தின் நோக்கத்திலில்லாமல் ஆவியின் உணர்வைக் கொண்டிருந்தார்கள். எனவே தேவன் அவர்களோடு நெருங்கிய ஒரு நண்பனை

போன்ற உறவை வைத்திருந்தார். ஆனால் அவர்கள் பாவத்திற்கு அடிமையான போது, அவர்கள் ஆவியின் நோக்கத்தை இழந்து, மாம்சத்தின் உணர்வுகள் அவர்களை மேற்கொண்டு அவர்கள் மாம்ச நோக்கமுள்ளவர்களாக மாறினார்கள். அதற்கு முன் அவர்கள் ஆவிக்குள் தேவனுக்கு மாத்திரம் செவிக்கொடுத்து வந்தார்கள். ஆனால் அவர்கள் பாவம் செய்த போது அவர்களின் மாம்சத்தின் ஐம்புலன்களுக்கும் உணர்வு ஏற்பட்டு அவர்கள் நிர்வாணிகள் என்பதை உணர்ந்தார்கள். ஆதியாகமம் 3:7 “அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது. அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளை தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.” எனவே தான் ஆதாமின் வம்சத்தை சேர்ந்த நாமும் ஐம்புலன்களின் உணர்வு தூண்டும் போது நாம் பாவத்தில் விழுகிறோம். ஆனால் நாம் பரிசுத்த ஆவியினால் நிரம்பி ஜெபிக்கும் போது எமது ஆவிக்குரிய மனிதன் பெலப்படுத்தப் பட்டு மாம்சத்தின் உணர்வுகளை மேற்கொள்ள வல்லமையை பெறுகிறோம். எனவே தான் நாம் ஜெபிக்கும் போது சோர்வு ஏற்படாமல் முழு நாளும் ஜெபிக்கவும் முடிகிறது. ஆகவே நீங்கள் ஆவியில் நிரம்பி ஜெபிக்கும் போது உங்களை சுற்றி என்ன மாம்சபிரகாரமான தூண்டுதல், வஞ்சனைகள் காணப்பட்டாலும் நீங்கள் அதனை மேற்கொண்டு ஜெபிக்கக்கூடிய ஒரு நிலைக்கு வருவீர்கள். கலாத்தியர் 5:16 “ஆவிக்கேற்றப்படி நடந்து கொள்ளுங்கள்: அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்”.

என் இனிய நண்பர்களே, பரிசுத்த ஆவியினால் நிரம்பி பரிசுத்த ஆவியானவரின் வரன்களை பெறுவது எங்கள் வாழ்வுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை இப்போது அறிந்திருப்பிர்கள் என நம்புகின்றேன். பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆட்கொள்ளும் போது, உலகத்தை ஜெயிக்கும் மாம்சத்தையும் உள்ளடக்கும் வல்லமை நம்மை நிரப்புகிறது. ஆகவே தேவ ஜனங்களே ஒரு வல்லமையான ஜெப வாழ்க்கைக்கான பிரதான அடித்தளமாக விளங்கும் முன்று விடயங்கள் பற்றி விளக்கமாக இப்போது அறிந்திருப்பிர்கள் என நம்புகின்றேன். உங்களுக்கு தீராத தாகமும், அன்பும் கர்த்தர் மேல் இருக்க வேண்டும். அத்தோடு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அவருடைய அந்நியபாஷையின் வரத்தை பரிசாக பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே இன்று தொடக்கம் ஜெபிக்கும் போது அவருடைய அந்நிய பாஷை வரத்தைக் கேட்டு ஜெபம் பண்ணுங்கள். துதியுங்கள். பின் கேளுங்கள். “எனக்கு தேவை கர்த்தாவே” என்று கேளுங்கள் பின் உங்கள் நாவில், துதித்தலில் ஒரு வித்தியாசத்தை காண்பீர்கள். அதுவே ஆவியானவர் உங்கள் நாவை தொடுவதாகும். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள் கர்த்தர் அவரோடு பேச தேவையானவற்றை உங்களுக்கு சேர்த்து கொடுப்பார். அதனை தொடர்ந்து நீங்கள் உங்கள் மாம்ச வழிநடத்தல் நீங்கி, உங்கள் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் வழிநடத்தலை காண்பீர்கள்.

# 4.
# உண்மையுள்ள ஊழியனாக இருத்தல்

**மத்தேயு 6:5 “அன்றியும், நீ ஜெபம்பண்ணும் போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம். மனுஷர் காணும்படியாக ஜெப ஆலயங்களிலும், வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.”**

நான் “எ-லேவல்“ பரீட்சை எழுதும் காலத்தில்; தான் ஒரு “கிறிஸ்தவன்” என்று யாவர் மத்தியில் மேளம் அடித்த ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் வகுப்பறைக்குள் வந்து முழுப்பாட வேளையும் “அனுதின மன்னா“ என்ற புத்தகத்தை மாத்திரம் வாசிப்பார். 16-17 வயதுடைய எமக்கு அது மிகவும் நல்ல ஒரு காரியமாக இருந்தது. ஏன் என்றால் ஓய்வாக வகுப்பில் சுற்றித் திரிய ஒரு பாடவேளையாக அது காணப்பட்டது. ஆனால் இப்போது நான் அதை பற்றி நினைக்கும் போது அது மிகவும் தவறான ஒரு ஆசிரியரின் நடத்தையாகும் என்பதே என் கருத்து. ஏன் என்றால் அவர் கற்பித்துக்கொடுப்பதற்கே அவருக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. அது என்ன கிறிஸ்தவ நூலாக இருந்தாலும் அதனை அவர் எவ்வளவு வாசித்தாலும் அது அவரை ஆவிக்குரிய மனிதனாக்காது. ஆனால் கர்த்தரோ ஒரு உண்மையுள்ள மேற்பார்வையாளனை அல்லது ஊழியனையே தேடுகிறார். அது கிறிஸ்தவ ஊழியமாயிருந்தாலும், சாதாரண ஊழியமாயிருந்தாலும் அதில் உண்மையாயிருப்பதையே கர்த்தர் விரும்புகிறார்.

இக்கதையை நான் உங்களுக்கு சொல்ல காரணமாயிருப்பது நாம் ஜெபிக்கும் போது நாம் ஜெபிப்பதைப் பற்றி மேளம் அடிக்கக்கூடாது. நாம் எவ்வளவு வீதம் ஆவிக்குரியவர்கள் என்று விளம்பரப்படுத்தக் கூடாது. சிலர் வீட்டில் ஜெபம் பண்ண விரும்புவதில்லை. ஆலயத்தில் மற்றவர்கள் காணும் படியாக ஜெபம் செய்ய செல்வார்கள். ஏன் எங்கள் ஆவிக்குரிய வாழ்கையை மற்றவர்களுக்கு விளம்பரப்படுத்த வேண்டும்? சிலர் வேலைத்தளங்களிலே வேதத்தை வாசிப்பார்கள். அது நல்லகாரியமாக இருந்தாலும் அவை உங்களுக்கு மேலதிக மதிப்பு எண்களை தேவனிடமிருந்து பெற்றுத்தராது. என்ன விடயமாக இருந்தாலும் நீங்கள் கர்த்தரை அவமானப்படுத்தாட உண்மையுள்ள ஊழியக்காரனாக எங்கும் இருத்தல் வேண்டும்.

இயேசு கிறிஸ்து நாம் எவ்வாறான ஜெப வாழ்ககையை கொண்டிருக்க வேண்டும் என்பதனை மத்தேயு 6: 6-8 கூறியுள்ளார். இவ் வசனங்களில் கூறியப்படி நாம் எவ்வாறு கர்த்தருக்கு பிரியமான முறையில் ஜெபிக்க வேண்டும் என்பதை பற்றி இப்போது அறிந்து கொள்வோம்.

1) 6 ஆம் வசனம் “நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் வீட்டு அறைக்குள் பிரவேசித்து” - ஜெபிப்பதற்கென நேரத்தை ஒதுக்குங்கள். பல வேலைகளை செய்து கொண்டிருக்கும் அதே வேளையில் ஜெபிக்க முயல்வது பயனற்ற ஒரு காரியமாகும். கர்த்தர் சொல்வது நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் வீட்டு அறைக்குள் பிரவேசித்து ஜெபம செய். அதன் அருத்தமாவது நாம் சகல வேலைகளையும் முடித்துவிட்டு யாரும் தொந்தரவு செய்யாத ஒரு நேரத்தை ஒதுக்கி அவருடன் தனிமையில் தொடர்பு கொள்ள பிரவேசிக்க வேண்டும். நீங்களே ஒரு தீர்மானம் எடுத்து “இந்த நேரம் நான் ஜெபிக்க போகிறேன், எந்த வேலையையும், சிந்தனையும் மனதில் போட்டுக்கொள்ள மாட்டேன்” என்று ஒரு உடன்படிக்கையை கர்த்தருடன் செய்வது அவசியம். வேலைக்கு செல்பவர்களுக்கு அதிகாலையிலோ அல்லது நித்திரைக்கு முன்போ ஜெபிக்க சிறந்தாக இருக்கும். உங்கள் தூக்கத்தை கொஞ்ச நேரம் கர்த்தருக்காக தியாகம் செய்வது உங்களுக்கு அதிக ஆசீர்வாதத்தை தரும். அதனை உறுதியாக கூறுகிறேன்.

2) 6 ஆம் வசனம் “அறைக்கதவை மூடி” - உங்களை வேறுபடுத்துங்கள். நான் கூறியது போல பல வேலைகளை ஒன்றாக செய்யாதீர்கள். ஜெபிக்கும் போது உங்கள் செல் தொலைபேசியை அனைத்து, தொலைக்காட்சி, வானொலி என்பவற்றை அனைத்து உங்களை உலகிலிருந்து தனிமைப்படுத்துங்கள். அதுவே கர்த்தர் விரும்புவது.

3) 6 ஆம் வசனம் “பிதாவை நோக்கி ஜெபம் பண்ணுங்கள்” - எல்லாமே பிதாவைக் குறித்ததாக இருக்கட்டும். உங்களைப் பற்றியோ அல்லது ஒரு நத்தார் தாத்தாவின் பட்டியல் போல எனக்கு இதை தாரும் அதை தாரும் என்று உங்கள் ஜெபம் இருக்க கூடாது. அவர் உங்களுக்கு என்ன வைத்திருக்கிறார் என்பதை கேளுங்கள். நான் உம்மை பிரியப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதை கேளுங்கள். நாம் அவரை துதிக்க வேண்டும். நன்றி செலுத்த வேண்டும். அவரை எம்மோடு பேச சொல்லுவதே நமது ஜெபமாக இருக்க வேண்டும்.

4) 7 ஆம் வசனம் “வீண் வார்த்தைகளை அலம்பாதேயுங்கள்.” - உங்கள் ஜெபம் ஒரு உணர்வும் இல்லாத தினமும் செய்யும் ஒரு சாதாரண செயல்முறையாக இருக்க கூடாது. பரிசுத்த ஆவியின் வழிநடத்தலோடு ஜெபியுங்கள். ஒவ்வொரு முறையும் ஜெபிக்கும் போது ஆவியானவரிடம் இவ்வாறு கேளுங்கள் - ஆவியானவரே என்னை வழிநடத்தும், தேவ மகிமையால் இந்த இடத்தை நிரப்பும், ஆவியானவரே என்னை ஆட்கொள்ளும். உங்கள் ஜெப நேரம் ஒரு சிறு ஆராதனையாக இருக்க வேண்டும். ஆராதிக்க உதவி செய்யும்படியாக தூதர்களை அனுப்பும் என்று கர்த்தரிடம் கேளுங்கள். அவர் அதை செய்வார். நீங்களும் அவர் பிரசன்னத்தை அனுபவிப்பீர்கள்.

5) 8 ஆம் வசனம் “அவர்களைப் போல் நீங்கள் செய்யாதிருங்கள்.”

ஆவிக்குரிய விடயங்களில் பலருக்கு இவ்வாறான ஒரு வழக்கம் உண்டு. நான் இந்த நபரை போல் ஜெபம செய்ய வேண்டும். அவர் 3 மணி நேரம் ஜெபிப்பார். அவர்களைப் போல நானும் 3 மணி ஜெபிக்க வேண்டும் என்று சொல்லும் ஒரு வழக்கம் உண்டு. அவ்வாறான நோக்கத்துடன் நாம் ஜெபிக்கும் போது கர்த்தரை நோக்கி பார்க்காமல் நேரத்தை பார்த்துப் பார்த்து தான் ஜெபிப்போம். பின் 3 மணி நேரம் வரவில்லையென்றதும் மனச்சோர்வடைவோம். எனவே யாரையும் போல நீங்கள் இருக்க தேவையில்லை. நீங்கள் உண்மையாய், உத்தமமாய், நீங்களாயிருங்கள். பிரியமானவர்களே, செலவு செய்யும் நேர அளவை விட செலவு செய்யும் நேரத்தின் தரமானதே முக்கியம். தேவன் உங்களோடு ஜெப வேளையில் பேச ஆரம்பிக்கும் போது அதைவிட மகிமையான காரீயம் வேறு எதுவும் இல்லை. அவரின் பிரசன்னத்தை நீங்கள் உணரும் போது, 3 மணியல்ல 6 மணி நேரம் கூட ஜெபிக்க முடியும். எனவே மற்றவர்களை நோக்கி பாராமல் கர்த்தரின் மீது மட்டுமே கண்களை வைத்து உங்கள் ஜெப வாழ்க்கையை கட்டியெழுப்புங்கள்.

எனவே என் இனிய நண்பர்களே மேற்கூறப்பட்டதன்படி கிறிஸ்து கூறிய படிமுறைகளை பின்பற்றி உங்கள் ஜெப வாழ்க்கையை ஏற்பாடு செய்வதே நன்று. இதனை பின்பற்றுவதால் நான் அடைந்த நன்மைகள் ஏராளம். எனவே நீங்கள் அதை பின்பற்றுங்கள் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றேன். தேவனுக்கே மகிமையும், கனமும் உண்டாயிருப்பதாக.

# 5.
# பிதாவோடு உள்ள உறவு

என் இனிய நண்பர்களே, தேவனுடைய பிள்ளைகளின் கையில் ஜெபம் என்பது ஒரு வல்லமை நிறைந்த ஆயுதமாகும். எனவே ஒரு வல்லமையான பயனுள்ள ஜெப வாழ்க்கைக்கு அத்தியவசிய அம்சங்கள் பற்றி மிகவும் ஆழமாக இந்த அத்தியாயம் தொடக்கம் நாம் பார்க்க போகிறோம். லூக்கா 11:2-4 இல் இயேசு எமக்கு ஜெபிக்கும் முறையை அன்போடு கற்றுத்தந்துள்ளார். ஆதனை கர்த்தருடைய ஜெபம் என்று நாம் அழைக்கிறோம். ஆனாலோ இன்று அதே ஜெபம் வீணாக, உணர்வுகளற்ற முறையில் மறுபடியும் மறுபடியுமாக ஜெபிக்கப்பட்டு வருவது கவலைக்கிடமாக உள்ளது. ஓசியா 4:6 இன் படி "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் அகங்காரமாகிறார்கள்". ஆம் பிரியமானவர்களே கர்த்தருடைய ஜெபம் என்பது அதிக ஆழமான அர்த்தமுள்ள ஒரு வேத பகுதி ஆகும். திரும்ப திரும்ப உணர்வுகளற்ற முறையில் சொல்வதற்கான உதாரண ஜெபமல்ல. அவர் எமக்கு இந்த ஜெபத்தை கற்றுக்கொடுத்தது, ஜெபமானது அவ்வாறான ஒழுங்கிணைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகவே. இப்பொழுது நாம் லூக்கா 11:2-4 வரையுள்ள கர்த்தருடைய ஜெபத்திலிருந்து நமது ஜெப வாழ்க்கையை ஒரு வல்லமையான ஜெப வாழ்க்கையாக மாற்றுவதற்கு அத்தியவசிய அம்சங்கள் பற்றி தியானம் செய்வோம்.

### 1 - "எங்கள் பிதாவே"

எங்கள் பிதாவே என்று கூறி ஜெபத்தை ஆரம்பம் செய்யும் படி கர்த்தர் எங்களுக்கு சொல்லுகிறார். ஏன் அவர் இவ்வாறு கூறினார்? ஒரு ஜெப வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு அவருடன் ஒரு உறவு அவசியமாகும். நாம் சந்திக்கும் யாவரையும் நாம் பிதா என்று அழைப்போமா? இல்லை தானே. ஆனாலும் எம்மை இவ் உலகுக்கு கொண்டு வர வழிவகுத்த, எம்மை பாதுகாக்கும், தேவையை சந்திக்கும் ஒருவரையே பிதா, அப்பா என்று உலகில் அழைக்கின்றோம். எனவே எம் ஜெப வாழ்வு வெற்றிகரமாக இருக்க கர்த்தரோடு ஒரு அப்பா-மகன்/மகள் போன்ற ஒரு உறவு அவசியம். அப்படியென்றால் என்ன? வெளிப்படுத்தல் 3:20 "இதோ! வாசற்படியிலிருந்து தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவை திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான்."

என் அன்பார்ந்தவர்களே, "நான் இரட்சிக்கப்பட்டுள்ளேன், நான் ஒரு பரம்பரை கிறிஸ்தவன்" என நீங்கள் கூறலாம். ஆனால் நான் உங்களிடம் கேட்பது

“நீங்கள் <u>கிறிஸ்துவுக்குள்</u> இன்று இருக்கின்றீர்களா?“ இது வல்லமையானதொன்றாகும். ரோமர் 8:1 படி “கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.” <u>இயேசு கிறிஸ்துவுக்குட்பட்டவர்கள்</u> என்றால் என்ன,? என் பிள்ளைகளே வெளிப்படுத்தல் 3:20 படி இயேசு கிறிஸ்து உங்களுடன் போஜனம் பண்ண மட்டுமல்ல உங்களுடன் ஒரு உறவை ஏற்படுத்தவே வருகிறார். அநேகர் இயேசு கிறிஸ்துவுக்கு தமது இதயத்தின் கதவை திறந்து கொடுப்பது உண்மை தான். ஆனாலும் அவரை வாசலில் நிறுத்தி விட்டு, வாசலை தாண்டி வரவே வேண்டாம் என்று தொடர்ந்து பாவத்தில் வாழ்கிறார்கள். ஆனால் உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். அவருடன் நீங்கள் ஒரு உறவில் இருக்கிறீர்களா? அல்லது அவரை வாசலில் நிறுத்தி விட்டு, வாசலை தாண்டி வரவே வேண்டாம் என்று வைத்திருக்கிறீர்களா? கீழ்வரும் வினாக்களுக்கான உங்கள் பதில் என்ன?

1) அவர் உங்கள் வாழ்கையின் எல்லா பகுதியிலும் பங்குள்ளவரா?

2) உங்கள் வாழ்கையில் மாற்றங்களை ஏற்படுத்த அவருக்கு அனுமதி உண்டா?

3) உங்கள் பழைய வாழ்க்கை முறைமைகளை விட்டு கிறிஸ்துவுடன் வாழ்கிறீர்களா?

4) அனுதினமும் ஜெபத்திலும், தியானத்திலும் ஈடுபடுகிறீர்களா? 5-10 நிமிடமல்ல, அவருடன் அர்த்தமுள்ள உறவு கொண்டுள்ளீர்களா?

5) ஆவியில் நிறைந்திருக்கிறீர்களா?

“ஆம்”, என்று உண்மையாக பதிலளித்திருப்பீர்கள் என்றால் உங்கள் உறவு சரியானது. இல்லையென்றால் இயேசுவை வாசலில் நிறுத்தி வைத்திருக்கிறீர்கள். உறவு என்றால் “நெருக்கம் அல்லது நெருங்கிய நட்பு” எனலாம். எனவே நீங்கள் கிறிஸ்துவுடன் நெருங்கிய நட்புடன் இருப்பது என்பது மேலுள்ள வினாக்கள் யாவற்றிற்கும் “ஆம்” என்ற பதிலை தரும்.

நாம் கிறிஸ்துவுடன் உறவிலிருக்கும் போது எம் உலக வாழ்கை முறை மாற்றப்படும். யோவான் 15:5 படி “நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளை கொடுப்பான்” 7ஆம், 8ஆம் வசனம் கூறுவது போல “நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும், நீங்கள் மிகுந்த கனிகளை கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கு சீடராயிருப்பீர்கள்.” நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் போது நாம் கொடுக்கும் கனிகள் கலாத்தியர் 5:22 படி அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம்,விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய யாவும் ஆகும். பிரியமானவர்களே உங்கள் பழைய பாவ வாழ்க்கை காரணமாக

வரும் வெட்கம், மன வேதனை யாவற்றையும் எடுத்து கர்த்தர் இக்கனிகளை இரட்டிப்பாகவே கொடுக்க விரும்புகிறார். அதிக அன்பு, சமாதானம் நிறைந்த வாழ்வை அவருக்குள் பெற்றுக்கொள்ளலாம். இதுவே நாம் கிறிஸ்துவுடன் உறவிலிருக்கும் போதும் அவரில் நிலைத்திருக்கும் போதும் நாம் பெறும் அசீர்வாதங்கள்.

எனவே அவருடன் நீங்கள் நெருங்கிய உறவை கொண்டிருக்க வேண்டும். அவருடைய போதனைகளை கனம் பண்ண வேண்டும். அவருக்கேற்ற வாழ்வை வாழ வேண்டும். 1 யோவான் 3:19-22 படி “இதனாலே,நாம் நம்மை சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்தி கொள்ளலாம். நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நான் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கின்ற படியினால் நாம் வேண்டிக்கொள்கிறது எதுவோ அதை அவரால் பெற்றுகொள்கிறோம்“. எனவே என் நண்பர்களே! கிறிஸ்துவுடன் நெருங்கிய உறவை கொண்டுள்ளோம் என நீங்கள் கூறினால் அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்வதே அவசியம். 1 தெசலெனிக்கேயர் 4:1 படி தேவனைப் பிரியப்படுத்தும்படி வாழ வேண்டும் என கூறப்படுகிறது. 1 தெசலெனிக்கேயர் 4:7-8 “தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டை பண்ணுகிறவன்,இவற்றை நிராகரிக்கிறவர்கள் மனுஷனையல்ல தேவனையே அசட்டை பண்ணுகிறார்கள்“. எனவே அவருடன் நெருங்கிய உறவினை வைத்து அவரை பிரியப்படுத்தும் வாழ்வை வாழ்வதே வல்லமையான ஜெப வாழ்க்கையின் முதல் படியாகும்.

# 6.
# அவர் நாமம் பரிசுத்தம்

என் இனிய நண்பர்களே, வல்லமையான ஜெப வாழ்க்கைக்கு அவசியமான இரண்டாம் அம்சமானது பிதாவுக்கு மிகவும் பிரியத்துக்குரிய ஒரு விடயமாகும்.

**2 - உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக**

அவரை பரிசுத்தம் என்று நாம் அழைப்பது “அவர் நாமம் பரிசுத்தம், நாம் ஆராதிக்கும் தேவன் பரிசுத்தமானவர்” என்பதை அறிக்கை செய்வதற்காகும். நாம் ஆராதிக்கும் தேவன் பரிசுத்தமானவர் என்பதை நாம் ஒரு நாளும் மறவாமல் பயபக்தியோடு அவரை தொழுதல் அவசியம். 1 நாளாகமம் 16:29 படி “கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையை செலுத்தி, காணிக்கைகளை கொண்டுவந்து, அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுதுகொள்ளுங்கள்“ என்று கூறப்படுகிறது. பரிசுத்த அலங்காரத்துடன் தொழுதுகொள்ளுங்கள் என்பது என்ன? எவ்வாறு பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரை தொழுதுகொள்வது? என்ற கேள்விகள் உங்களுக்கு இருக்கலாம். இதற்குரிய பதில் சங்கீதம் 15 அதனை வாசிக்கும் போது நீங்கள் அறிந்து கொள்வீர்கள். ஆம் பிரியமானவர்களே சங்கீதம் 15ல் கூறியப்படி உங்கள் கரங்களை உயர்த்தி அவரை ஆராதிக்கும் போது பின்வரும் விடயங்கள் உங்கள் வாழ்வில் நாள்தோறும் வெளிப்பட வேண்டும்.

1) தேவனை பிரியப்படுத்தும் வாழ்வை வாழ வேண்டும்.
2) உங்கள் நடவடிக்கைகள் நீதியானதும் தேவ வார்த்தையோடும் இணைந்திருக்க வேண்டும்.
3) உண்மையை பேச வேண்டும். உங்களுக்கேற்றபடி உலக நடத்தையின் படி தேவ வார்த்தையை மாற்றக்கூடாது.
4) யாரையும் பற்றி கீழ்த்தரமாக பேசாதிருங்கள்.
5) யாவருக்கும் நன்மை செய்யுங்கள். பவுல் எபிரேயர் 12:14ல் கூறியது போல யாவரோடும் சமாதனமாயிருக்க நாடுங்கள். நீங்கள் யாவரோடும் சண்டை செய்யும் நபராய் இருக்காமல் சமாதானப் பிரபுவை பிரதிபலிப்பவராக இருங்கள்.
6) யாரையும் என்ன கோபத்தின் காரணமாக சபிக்காதீர்கள்.
7) பரிசுத்த வாழ்வு வாழ்பவர்களை மதியுங்கள். பாவத்தை நேசிப்பவர்களுடன் சிநேகம், நட்பு வைத்திருப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். 1 கொரிந்தியர்

5:11ல் உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிப்பவர்களுடன் இசைந்திருக்காதீர்கள் என்று கூறப்படுகிறது.

8) ஆம் என்றால் ஆம் எனவும், இல்லை என்றால் இல்லை எனவும் நேர்மையாக கூறக்கூடிய, மற்றவர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைக்கக் கூடிய தேவ பிள்ளைகளாக இருங்கள்.

9) உபகாரம் கருதாமல் உதவி செய்யுங்கள், இதுவே கிறிஸ்து எம்மிடம் எதிர்ப்பார்ப்பதாகும்.

10) உண்மையுடையவர்களாயிருங்கள். பணம் சம்பதமான காரியங்களில் மற்றவர்களை ஏமாற்றாமல் உண்மையாய் இருங்கள். ஊழல் செய்யாதிருங்கள். லஞ்சம் வாங்கவும் வேண்டாம் கொடுக்கவும் வேண்டாம்.

ஆம் பிரியமானவர்களே "நீர் பரிசுத்தர்" என்று நாம் சொல்லி தேவனை துதிக்கும் போது எம் வாழ்க்கை அவரின் பரிசுத்தத்தை பிரதிபலிக்க வேண்டும். இல்லையெனில் நாம் அவரை பரிசுத்த அலங்காரத்துடன் அவரை துதிக்க முடியாது போகும். யோவான் 4:24 படி உண்மையாய் அவரை துதிப்பவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வார்கள் என்று கூறப்படுகிறது. இதனை நாம் சற்று ஆழமாக ஆராய்வோம்.

ஆவியோடு ஆராதிப்பது என்றால் என்ன? கர்த்தரை மாம்சத்தில் ஆராதிக்க முடியாது. அதாவது மனித விதிமுறைகள், பரம்பரை வழக்கங்கள், மாம்ச செய்கைகள், இசை ஒலி ஊடாக தூண்டுதல் போன்ற மாம்சமான செயல்களினால் ஆராதிக்க முடியாது. எங்கள் ஆவிக்குரிய மனிதன் கர்த்தரோடு தொர்புபடாவிட்டால் அவரின் பிரசன்னத்தை தொட்டுணர்ந்து அவரை யோவான் 4:24 படி உண்மையாய் அவரை துதிக்க முடியாது. ஆவிக்குரிய மனிதன் பற்றி விளக்கமாக பார்ப்போம். தேவன் நம்மை மாம்சம், ஆத்மா, ஆவி ஆகிய மூன்றையும் கொண்டிருக்கும் சிருஷ்டிகளாக படைத்தார். மாம்சம் என்பது நமது சரீரமும் ஐம்புலன்களினால் வரும் உணர்வுகளும் ஆகும். ஆத்மா என்பது எங்கள் மனசாட்சி நமது சித்தம் மன உணர்வுகள் ஆகிய யாவையும் கொண்டுள்ளது என சுருக்கமாக கூறலாம். ஆவி என்பது என்றென்றும் வாழும் எங்கள் உயிர் என்பதே ஆகும். தேவன் மனிதனை படைத்து ஏதேன் தோட்டத்தில் வைத்த போது அவர்களை ஆவியின் வழிநடத்தலில் மாம்ச உணர்வுகளுக்கு அடிமையாகாமல் வாழ்க்கை வாழவே படைத்தார். ஆனால் ஆதாமின் பாவத்தினிமித்தம் நாம் மாம்சத்தின் வழிநடத்தலில் வாழும் மக்களாக மாறிவிட்டோம். இந்நிலையில் நாம் எப்படி மாம்சத்தை கட்டுப்படுத்தி ஆவிக்குரிய மனிதனை பலப்படுத்த முடியும்? ரோமா 6:1-4 இன் படி நாம் இரட்சிக்கப்படும் போது கர்த்தர் நமக்கு தரும் புது வாழ்க்கையின் பாதையிற்குள் பிரவேசித்து தேவ வார்த்தையின் படி வாழ்ந்து (ரோமர்:8:5) பரிசுத்த ஆவியானவரின் கட்டுபாட்டின் கீழ் நாம் வர வேண்டும். இந்நிலையில் ஆவிக்குரிய மனிதன் பலப்படுத்தப்பட்டு மாம்சத்தை

கட்டுப்படுத்தி பரிசுத்த வாழ்வை வாழும் வல்லமையை பெறுகிறோம். என் நண்பர்களே நீங்கள் பரிசுத்த வாழ்வை வாழ்ந்தால் சதாகால ஜீவன் மட்டுமல்ல, இவ்வுலகில் வாழும் காலத்தில் தேவ ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வீர்கள (யோசுவா:1:8). எனவே தேவனைப் பிரியப்படுத்துவது யாவற்றிலும் சிறந்தது. எனவே ஆவியின் வழிநடத்தலில் நாம் வாழும் போது ஆராதிக்கும் போதெல்லாம் கர்த்தரின் பிரசனத்தை தொட்டுணர்ந்து அவரை யோவான் 4:24 படி உண்மையாய் அவரை துதிக்க முடிகிறது.

இரண்டாவதாக உண்மையோடு ஆராதிப்பது என்றால் என்ன?. எபிரேயர் 12:28-29 கூறுவது போல் “அசைவில்லாத ராஜ்யத்தை பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையை பற்றிக்கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் இரட்சிக்கின்ற அக்கினியாயிருக்கிறாரே“. நாம் தேவனை பயத்தோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும். அநேகர் தேவனை ஒரு விளையாட்டுப் பொருளெனக் கருதி அவரை அவ்வாறே வாழ்க்கையில் வைத்துள்ளார்கள். ஆனால் நண்பர்களே இயேசு மிகவும் அன்பானவர் அதேநேரம் அவர் நீதியின் தேவன் மற்றும் நீதியுள்ள நியாயாதிபதியுமானவர் (சங்கீதம் 7:11). நாகூம் 1:2-3 “கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவர். உக்கிரகோபமுள்ளவர். கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர். அவர் தம்முடைய பகைவர்களுக்காக கோபத்தை வைத்திருக்கின்றவர்.கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர். அவர் ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார். கர்த்தருடைய வழி சுழல் காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது. மேகங்கள் அவருடைய பாதத்துக்குள்ளாயிருக்கிறன”. நாகூம் 1:7 “கர்த்தர்நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை. தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்”. ஆம் பிரியமானவர்களே கர்த்தர் மிகவும் நல்லவர், அன்பானவர். ஆனால் அவர் அன்பைத் தெரிந்தும், அவர் உங்களை இரட்சித்து மீட்ட பின்பும் அவரை நீங்கள் அசட்டைப் பண்ணுவீர்களானால் அவரின் கோபத்திற்கு ஆளாவீர்கள். எனவே என் நண்பர்களே அவரை நாம் கனம் பண்ண வேண்டும்.

செப்பனியா:1:7ல் “கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்” என கூறப்பட்டுள்ளது. ஏன் அவ்வாறு கூறப்பட்டுள்ளது? நாம் கர்த்தருக்கு முன்பாக சொல்லும் காரியங்கள் குறித்து கவனமாக இருக்க வேண்டும். அவர் நம்மை வனைந்து திருத்தும் போது அவருக்கு எதிராக அல்லது அவரை காயப்படுத்தும் வார்த்தைகளை கூறாதீர்கள். பிரசங்கி 5:1-2 படி “நீ தேவாலயத்துக்குப் போகும் போது உன் நடையைக் காத்துக்கொள், மூடர் பலியிடுவது போலப் பலியிடுவதைப் பார்க்கிலும் செவிக்கொடுக்கப் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள். தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தை சொல்லாமலும் இரு. தேவன் வானத்திலிருக்கிறார். நீ பூமியிலிருக்கிறாய். ஆதலால் உன் வார்த்தை சுருக்கமாயிருப்பதாக”.

பிரியமானவர்களே கர்த்தர் எங்கள் நேரத்தின் படி வேலை செய்யமாட்டார். பிரசங்கி 3:11ல் கூறப்பட்டுள்ளப்படி “அவர் யாவற்றையும் அதன் நேரத்தில் அழகாக்குவார்”. எமக்கு பதில் ஜெபித்தவுடனே இரண்டு, மூன்று நாளில் தேவைப்பட்டாலும் அவர் சகல காரியங்களையும் அவர் சித்தத்தின்படியே அவர் நேரத்திலேயே அனுமதிப்பார். எனவே உங்கள் வாழ்க்கையை அவருடைய கரத்தில் வையுங்கள் (சங்கீதம்:37:5). கர்த்தரைப் பார்த்து “கர்த்தாவே எனக்கென நீர் வைத்திருக்கும் யாவும் நன்மையானவை (எரோமியா 29:11). எனவே நான் பதறமாட்டேன்” என்று கூறுங்கள்(லூாக்கா:12:22-34). வாழ்வில் அவர் செய்த யாவற்றிற்கும் நன்றி சொல்லி அவர் நாமத்தை மகிமைப்படுத்துங்கள். இதுவே நீங்கள் அனுதினமும் சொல்ல வேண்டியதாகும். ஒருபோதும் கர்த்தரைப் பார்த்து “ஏன் இப்படி இருக்கிறது? ஆசீர்வாதமில்லையே, என்னால் முடியாது“ இது போன்ற எதிர்வான கருத்துக்களை கூற வேண்டாம். அதைவிட கர்த்தர் சமூகத்தில் அமைதியுடன் இருப்பது நல்லது.

எனவே பிரியமானவர்களே வல்லமையான ஜெப வாழ்விற்கு பரிசுத்தமான வாழ்க்கையும் பரிசுத்த அலங்காரத்துடன் தொழுதுகொள்ளுதலும் மிக முக்கியமான விடயங்கள் ஆகும்.

# 7.
# கர்த்தருடைய ராஜ்யம் வருவதாக!

வல்லமையான ஜெப வாழ்க்கைக்கு அவசியமான மூன்றாவது அம்சமானது உலகினை மாற்றக் கூடிய ஒன்றாகும். மோசே அன்று கர்த்தருக்கு முன்பாக அழச்செய்தது இதன் நிமித்தமே ஆகும்.

**3 - உம் ராஜ்யம் வருவதாக**

ஏன் கர்த்தர் அவர் ராஜ்யம் வரவேண்டும் என்று ஜெபிக்க சொல்கிறார்?. இது அவரின் பிரசனத்தை குறிக்கும். எனவே அவர் பிரசன்னத்தை உங்கள் வாழ்க்கையில், உங்கள் ஜெப அறையில் வரவேற்று ஜெபம் செய்யுங்கள். யாத்திராகமம் 33:15-17ல் மோசே கர்த்தருடைய பிரசன்னத்தின் முக்கியத்துவம் பற்றி விவரிக்கிறார். மோசே கர்த்தரை நோக்கி இவ்வாறு கூறினார் - “உம்முடைய சமூகம் என்னோடே கூடச் செல்லாமற் போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும். எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதனால் அறியப்படும். நீர் எங்களோடே வருவதினால், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி நீ சொன்ன இந்த வார்த்தையின்படியே செய்வேன், என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது உன்னை பெயர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார்“.

அவர் பிரசன்னம் என்பது என்ன? அவர் பிரசன்னம என்பது அவர் உங்களுடன் இருக்கிறார் என்பததே ஆகும் (யோசுவா 1:5). தேவனாகிய கர்த்தர் உங்களுடன் இருந்து உங்களை வழிநடத்துவார். நீங்கள் அவர் உங்கள் பக்கம் இருப்பதை உணர்வீர்கள். உங்கள் ஆவி அவருடன் தொடர்பில் இருக்கும். சங்கீதம் 89:15 “கர்த்தாவே அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள்”.

ஏன் தேவனுடைய பிரசன்னம் எமக்கு அவசியம்? மோசே கூறுவது போல் அப்போழுது தான் எனக்கு உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது என அறியப்படும். நான் விசேஷித்தவன் என்று விளங்கும். ஆம் நண்பர்களே அவர் பிரசன்னம் எம்மோடு இருக்கும் போது நாம் தேவ காருண்யத்தை பெறுகின்றோம். தேவ காருண்யம என்றால் என்ன? சங்கீதம் 5:12 படி “கர்த்தாவே நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருண்யம் எனும் கேடயத்தாலே அவனைச் சூழ்ந்து கொள்வீர்“. எபிரேய மொழியில் காருண்யம் என்றால் “ரேசன்” என்ற வார்த்தையால் குறிக்கப்படுகிறது. அதன் அருத்தம் கர்த்தர் நம் மீது பிரியமாய் இருக்கிறார், நம்மை உயர்வாக மதிக்கிறார், நமது

வாழ்வை கண்டு மகிழ்ச்சி அடைகிறார் என்பதே ஆகும். கர்த்தர் நம்மை மதிக்கிறார்! அது உண்மையா என்று நீங்கள் கேட்களாம். ஆம் நாம் தேவனை பிரியப்படுத்தும் வாழ்க்கை வாழும் போது அவர் நம்மை உயர்வாக மதிக்கிறார், நமது வாழ்வை கண்டு மகிழ்ச்சி அடைகிறார். பிரியமானவர்களே தேவ காருண்யம் நம் வாழ்க்கைக்கு உயர்வையும் ஆசிர்வாதத்தையும் கொண்டு வரும். இதுவே தானியேலை உயர்த்தி வைத்தது. தானியேல் 6:1-3 “ராஜ்யம் முழுவதையும் ஆளும்படிக்குத் தன் ராஜ்யத்தின் மேல் நூற்றிருப்பது தேசாதிபதிகளையும், ராஜாவுக்கு நஷ்டம் வராதபடிக்கு அந்த தேசாதிபதிகள் கணக்கு ஒப்புவிக்கிறதுக்காக அவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளையும் ஏற்படுத்துவது தரியுவுக்கு நலமென்று கண்டது. அவர்களில் தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான். தானியேலுக்குள் விஷேசித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்“. ஆம் தானியேல் பிரதமராக நியமிக்கப்பட தேவ காருண்யமே காரணமானது. அவ்வாறே யூத அடிமையாக இருந்த எஸ்தரை ராஜா தேர்ந்தெடுக்க தேவ காருண்யமே காரணமாக இருந்தது. எஸ்தர் 2:15 படி அநேக சௌந்தர்யமான பாபிலோன் பெண்கள் இருந்தபோதும் அவள் யாவர் கண்களிலும் இரக்கம் பெற்று அவள் அடிமைத்தனத்திலிருந்து உயர்ந்து ராணியாகினாள். இது தேவ காருண்யம் அவள் மீது இருந்ததனாலேயே ஆகும். தேவ ஜனங்களே கர்த்தருடைய காருண்யம் எம் வாழ்க்கையில் இருக்குமானால் எம்மால் வல்லமையான காரியங்களை செய்யலாம். சங்கீதம்:23:6 படி “என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னை தொடரும். நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்“. ஆம் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் பெற அவர் பிரசன்னம அவசியமாகும். அவர் பிரசன்னம உங்களுடன் இருந்தால் யாவரும் அதை அறிந்து கொள்வார்கள். முழு உலகமும் உங்கள் மீது தேவ மகிமை இருப்பதையும் உங்கள் ஊடாக இயேசுகிறிஸ்துவையும் காண்பார்கள். அதனால் தான் கர்த்தர் அவர் பிரசன்னத்தை அவரிடம் கேட்கும்படியாக கற்றுக்கொடுக்கிறார்.

தேவ ஜனமே கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு இரவும் பகலுமாய் இருக்க வேண்டும். யாத்திரயாகமம்:13:21 படி இஸ்ரவேலருடன் அவர் பிரசன்னம் பகலிலே மேகஸ்தம்பமாகவும், இரவிலே அக்கினி ஸ்தம்பமாகவும் வழி நடத்தியது. சங்கீதம் 91:1 இன் படி “உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்“. இந்த வசனத்தின் படி அவருடைய பிரசன்னம் உங்களோடு நிரந்தரமாக இருக்க நீங்கள் அவருடன் தினமும் உறவாட வேண்டும். அவர் பிரசன்னம் உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமாக இருக்க அவருடன் நெருங்கிய உறவும், பரிசுத்தமும் அவசியமாகும். அவர் பரிசுத்தமற்ற பாத்திரத்தில் உறவு கொள்ளமாட்டார். 1 கொரிந்தியர் 6:19-20 படி “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய

ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறிவீர்களா? கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரம், ஆவியினால் தேவனை மகிமைப்படுத்துங்கள்". 1 கொரிந்தியர் 3:16-17 படி "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தை கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்". எனவே பரிசுத்தம் என்பது கர்த்தருடைய பிரசன்னம் உங்களின் வாழ்க்கைக்குள் பிரவேசிக்க அவசியமானதொன்றாகும். தேவபிரசன்னம் உங்களில் இருக்கும் போது அவர் காருண்யம் எப்போதும் உங்கள் வாழ்க்கையை எல்லா வழிகளிலும் ஆசீர்வதிக்கும். தேவபிரசன்னமே வல்லமையான ஜெபவாழ்கைக்கு அவசியமாகும் 3வது விடயமாகும்.

# 8.
# உங்கள் தேவைகள்

கர்த்தருடைய ஜெபத்தில் (லூக்கா:11:2-4) கூறப்பட்ட இந்த 4வது விடயமானது எம் வாசகர்களுக்கு பிரியமான ஒரு தலைப்பாகும் என நான் நம்புகிறேன்.

**4 - எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அளித்தருளும்**

ஆம் நண்பர்களே கர்த்தர் எங்கள் அன்றாடம் வாழ்வு மீதும் நாம் வாழும் விதம் பற்றியும் அக்கறை உடையவர். மின் கட்டணம் கட்ட வேண்டும், வீட்டு செலவுக்கு பணம் தேவை, கல்வி கற்க பணம் தேவை, வீடு தேவை, வாகனம் தேவை என்பது போல எம் தேவைகள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். சங்கீதம் 58:22 படி "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒரு போதும் தள்ளாடவிடமாட்டார்". சங்கீதம் 52:8 கூறுவது போல "நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவ மரத்தை போலிருக்கிறேன்". சங்கீதம 68:19 கூறுவது போல "எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டவாதாக நம் மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே". ஆம் நண்பர்களே நாம் நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படாமல் ஆசீர்வாதமாக வாழ்வதை அவர் விரும்புகிறார். லூக்கா:12:22-34இல் நம் தேவைகளை எவ்வாறு அவர் சந்திப்பார் என்பதை கற்றுக்கொடுக்கிறது. "எதை உண்போம், என்று உங்கள் ஜீவனுக்காகவும், எதை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காவும்,கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்கு சொல்கிறேன். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விஷேசித்தவைகளாயிருக்கிறன. காகங்களைக் கவனித்துப் பாருங்கள் அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை. அவைகளுக்கு பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை. இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார். பறவைகளை பார்க்கிலும் நீங்கள் எவ்வளவு விஷேசித்தவர்கள். கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தை கூட்டுவான். காட்டு புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைப்பதுமில்லை,தூற்றுகிறதுமில்லை என்றாலும் சாலமோன் முதலாய் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்கு சொல்லுகிறேன். இப்படியிருக்க அற்பவிசுவாசிகளே இன்றைக்கு காட்டிலிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால் எதை உண்போம், குடிப்போம் என்று நீங்கள் கேளாமலும் சந்தேகப்படாமலும் இருங்கள். இவைகளையெல்லாம் உலகத்தார்

நாடி தேடுகிறார்கள். இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும். பயப்படாதே சிறுமந்தையே! உங்களுக்கு ராஜ்யத்தை கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார். உங்களுக்குள்ளனவைகளை விற்று பிச்சைகொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள். அங்கே திருடன் அணுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை, உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்".

தேவ ஜனமே, நமது அனுதின வாழ்விற்கும் நம் பொருளாதார நிலைமைக்கும் மேற் கூறிய வேத பகுதி இரு முக்கிய கட்டளைகளை தருகிறது. முதலாவது கட்டளை "எதற்கும் கவலைப்படாதீர்கள்". இரண்டாவது "தேவ ராஜ்யத்தை தேடுங்கள்" ஏனென்றால் உங்கள் பொக்கிஷம் எங்கேயோ உங்கள் மனமும் அங்கேயே இருக்கும்.

### 1 - கவலைப்படாதீர்கள்

பலருக்கு ஜெபம் என்பது அதிகப்படியாக எம் தேவைகள், விருப்பங்கள் தேவனிடம் கூறுவதே ஜெபம் ஆகும் என சொல்வார்கள். காரணம் சாதாரணமான ஒரு நாளில் பாதி நேரமாவது ஒரு மனிதன் அவனின் தேவைகள், பணம் ஆகியவற்றைப் பற்றியே சிந்தித்து கொண்டு இருப்பான். எனவே ஜெபிக்கும் போதும் அந்த சிந்தனையோடே ஜெபத்திக்குள் பிரவேசிப்பான். ஆனால் கர்த்தர் சொல்வது "கவலைப்பட வேண்டாம் உங்கள் தேவைகள் யாவற்றையும் நான் அறிவேன். எனக்குகந்தவைகள் எனக்களித்து உன் கண்களை என் மீது வை. நான் சகலவற்றையும் பார்த்துக்கொள்வேன்" என்கிறார். சங்கீதக்காரன் கூறுவது போல உங்கள் கவலைகள் எல்லாம் அவரிடம் கொடுங்கள் அவர் யாவற்றையும் பார்த்துக்கொள்வார். உங்கள் பொருளாதார தேவைகளை குறித்து கவலைப்பட தேவையில்லை. காரணம் நீங்கள் அவரை உங்கள் வாழ்கையில் கனம் பண்ணும் போது அவர் யாவையும் செய்து முடிப்பார். அவருடைய உடன்படிக்கையானது அவருடைய ராஜ்யத்தை நாம் தேடும் போது இவையாவுமே உங்களுக்கு கொடுக்கப்படும் என்பதாகும்.

அவர் ஜெபத்தைக் கற்றுக்கொடுத்த போது அன்றைய ஆகாரத்தைப் பற்றியே பேசுகிறார். நாளைய தினம், அடுத்த வாரம் பற்றி கூறவில்லை. ஏன் அவ்வாறு அன்றைய ஆகாரத்தைப் பற்றி மட்டுமே அவர் கூறினார்? நாளைய தினத்தை குறித்து கவலைப்படாமல் இருக்க வேண்டும் என்பதேயாகும். காரணம் நாளைய தினம் அவருடைய கரத்தில் உள்ளது. எனவே அவரை நோக்கி மட்டுமே பார்க்க வேண்டும் என நமக்கு கூறுகின்றார். ஏரேமியா:29:11-13 கூறுவது போல "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படி நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை

அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. அப்பொழுது நீங்கள் கூடி வந்து, என்னைத் தொழுதுகொண்டு என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள், நான் உங்களுக்கு செவிகொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்". ஆம் பிரியமானவர்களே எம்மைக்குறித்து நன்மையான திட்டத்தை அவர் வைத்திருக்கிறார். அத்திட்டம் எம்மை ஆசீர்வதிப்பனவே. அந்த நம்பிக்கை எம்மில் வர வேண்டும். எனவே நாம் ஜெபிக்கும் போது என் கர்த்தர் யாவற்றையும் செய்வார் என்ற விசுவாசத்துடன் ஜெபிக்கும் போது எம் ஜெபம் வல்லமையுள்ளதாகிறது. ஜெபிக்க செல்லும் போது கவலையுடன் செல்வதைவிட என் தேவன் எனக்காக யாவற்றையும் செய்வார் என்று நம்பிக்கையுடன் செல்வது (ஏரோமியா 29:10-11) சிறந்தது. கவலைப்படுதல் அபாயமானதொன்றாகும். கவலைப்படுவது பிசாசானவன் உங்கள் வாழ்கையில் இலகுவாக நுழைவதற்குள்ள ஒரு விதியாகும். ஏன்? நீங்கள் கவலைப்படும் போது, பயம் தானாக நுழைகிறது. பயம் எனும் நுழைவாயிலின் வழியாக உங்கள் இருதயத்திற்குள் பிசாசானவன் நுழைகிறான். உதாரணமாக நாம் பொருட்கள் விலையேறுமா? இல்லையா? என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது வாழ்க்கைக் குறித்தான பயம் தானாக வந்துவிடுகிறது. உங்களிடம் நான் கேட்கும் கேள்வி என்னவென்றால் பொருளாதார வீழ்ச்சி உலகில் ஏற்படும் போது நீங்கள் கவலைப்பட வேண்டுமா? இல்லை பிரியமானவர்களே கவலைப்பட தேவையே இல்லை. பிலிப்பியர்:4:19 படி "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" எனவே உங்கள் தேவைகள் என்னதாக இருந்தாலும் அவர் அவை யாவற்றையும் நிறைவேற்றுவார். உலக பொருளாதார நிலைமை இக்கட்டான நிலையில் இருந்தாலும் அவர் அவருடைய மகிமையிலே நிறைவாக்குவார் என்கிறார். 1 யோவான்:2:17 படி உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். எனவே என் நண்பர்களே உங்களுக்கு பொருளாதார பிரச்சினையாக இருந்தாலும் அல்லது பரீட்சை பெறுபேறுக்காக காத்திருப்பது, பதவி உயர்வு, திருமணம், சுகயீனம் என்ன விதமான பிரச்சினைகள் இருந்தாலும் செப்பனியா தீர்க்கதரிசி கவலைப்படாமல் இருக்க 5 காரணங்களை கூறுகிறார். செப்பனியா 3:17 "உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். அவர் வல்லமையுள்ளவர். அவர் இரட்சிப்பார். அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார். அவர் உன் பேரில் கெம்பீரமாய் களிகூறுவார்".

1) உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார் - கர்த்தருடைய பிரசன்னம் எம்மோடு இருக்கும் போது சகல காரியங்களும் சரியான முறையில் நடக்கும் என உறுதிசெய்ய முடியும். தேவ பிரசன்னம் தாவீதுடன்

இருந்தமையாலேயே அவன் கோலியாத்தை முறியடிக்க கூடியதாக இருந்தது. தேவ பிரசன்னம் கிதியோன்னுடன் இருந்தமையாலேயே 300 போர் சேவகர்களுடன் மிதியானிய சேனையை முறியடிக்க இலகுவாக இருந்தது. எனவே தான் பரிசுத்த வாழ்வும் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தல் உள்ள வாழ்க்கை அவசியம். இவை இரண்டும் இருக்கும் போது அவர் பிரசன்னம் எம்மோடு உறவாடும். அவரின் பிரசன்னம் எம்மோடு இருக்கும் போது வாழ்வில் எப்போதும் வெற்றியை பெறுவோம்.

2) அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார் - அநேக தடவைகள் நாம் கர்த்தர் யார் என்பதை மறந்து, இவ்வுலகத்தின் நிலைமையால் நம்மை போல் அவரும் ஆளப்படுகிறார் என நினைக்கிறோம். நம் கர்த்தர் யார் என்பதை நீங்கள் அறிய வேண்டும். சங்கீதம் 104:5-9இன் படி “பூமி ஒரு போதும் நிலைபெயராதபடி அதன் ஆதாரங்கள் மேல் அதை ஸ்தாபித்தார். அதை வஸ்திரத்தினால் மூடுவது போல வெள்ளத்தினால் மூடினீர். பர்வதங்களின் மேல் தண்ணீர்கள் நின்றது. அவைகள் உமது கண்டிப்பால் விலகியோடி, உமது குமுறலின் சத்தத்தால் விரைந்து போயிற்று. அவைகள் மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, நீர் அவைகளுக்கு ஏற்படுத்திய இடத்தில் சென்றது. அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்”. பிரியமானவர்களே பூமியானது கர்த்தருக்கு செவிகொடுக்கிறது. எனவே நீங்கள் கவலைப்பட தேவையில்லை. கர்த்தர் உங்களை இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார்.

3) அவர் உன் பேரில் மகிழுவார் - இவ் வாழ்க்கையை வழிநடத்த அவர் காருண்யம் மாத்திரம் தேவை. அக்காருண்யமே யோசேப்புக்கு பார்வோனின் கண்களில் தயவை ஏற்படுத்தியது. தானியேலின் சிறை இருப்பை மாற்றி அவனை பிரதமராக்கியதும் அந்த காருண்யமே ஆகும். அதுவே எஸ்தரை ராணியாக மாற்றியது. அவருடைய காருண்யம் நீதிமான்கள் மேல் எப்போதும் இருக்கும். (சங்கீதம்:5:12 “நீர் நீதிமானை ஆசீர்வதித்து காருண்யம் எனும் கேடயத்தினால் அவனை சூழ்ந்து கொள்வீர்”)

4) அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார் - யோவான்:14:27 “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பாயப்படாமலுமிருப்பதாக”. கர்த்தர் கூறுகிற சமாதானம் எபிரேய மொழியில் “ஷாலோம்” எனப்படும். இதன் தமிழ் மொழிப் பெயர்ப்பு சமாதானம், ஒற்றுமை, மனநிறைவு, சுகவாழ்வு, சாந்தி ஆகிய யாவும் நம் வாழ்வில் இருப்பதே ஆகும்.

5) அவர் உன் பேரில் களிகூறுவார் - கர்த்தருடைய மகிழ்வுக்கு ஒப்பான மகிழ்வு எதுவுமேயில்லை. என்னுடைய காரியாலய நண்பர்கள் நான்

ஏதாவது நிகழ்வுகளுக்கு, களியாட்டங்களுக்கு செல்லாவிட்டால் அந்நிகழ்வின் மகிழ்ச்சியைப் பற்றி கூறுவார்கள். ஆனால் அந்த மகிழ்ச்சியோ ஒரு சில மணிநேரமே நீடிக்கும். அதற்கு பின் அவர்களின் இருதயம் வெறுமையாயிருக்கும். ஆனால் கர்த்தருடைய மகிழ்ச்சியோ என்றும் நீடிக்கும். அவரை துதிக்கும் போது அது அதிகரிக்கும். சங்கீதம்:84:10 படி ஆயிரம் நாளை பார்க்கிலும் அவர் பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது.

எனவே நண்பர்களே இவ்வசனத்தின் மூலம் நாம் கவலைப்படத் தேவையே இல்லை என்பதற்கு 5 காரணங்களை நான் உங்களுக்கு முன்வைத்திருக்கிறேன். எனவே உங்கள் வாழ்கையில் என்ன சோர்வுகள், பிரச்சினைகள் வந்தாலும் கவலைப்படாமல் இந்த 5 விடயங்களையும் நினைவு கூறுங்கள். அவர் பெரியவர், வல்லவர் யாவற்றையும் வாய்க்கச்செய்வார்.

2 - முதலாவது அவரை தேடுங்கள்

என் நண்பர்களே கர்த்தர் உங்களை ஆபிரகாமைப் போல, வேதத்தில் உள்ள யாவரையும் போல ஆசீர்வதிக்க விரும்புகிறார். வேதத்தில் கூறப்பட்டிருக்கும் யாவரும் செழிப்பான வாழ்வை வாழ்ந்து வந்தார்கள். ஆனாலும் இவ்வாறு அவர்கள் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டாலும் வேதத்தில் கூறப்பட்டிருக்கும் யாவரும் அவர்களின் கண்களை உலக பிரகாரமான காரியங்களின் மீது வையாமல் எப்போதும் கர்த்தர் பேரில் அவர்கள் கண்களை வைத்திருந்ததினால் அவர்கள் இன்னும் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டார்கள். 1 தீமோத்தேயு 6:9-10 படி ஐசுவரியவான்களாக விரும்புகிறார்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு விலகி, அநேக வேதனைகளாலே தங்களை உருவகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது நாம் பணத்தைப் பற்றி பேசுவோம். எபிரேயர்:13:5 படி நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கின்றவைகள் போதுமென்று எண்ணுங்கள் என்று ஒரு கட்டளையை நமக்கு தருகிறது. ஏனென்றால் கர்த்தர் நமக்கு தந்திருக்கும் வாக்குறுதி நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதும்மில்லை என்றும் அவர் நம் தேவைகளை நிறைவேற்றுவார் என்றும் சொல்லியிருக்கிறார். இவ்வுலகில் வாங்கவும், விற்கவும் பணம் ஒரு ஊடகமாக காணப்படுகிறது. அதை கர்த்தரும் அறிவார். எனவே உங்களுக்கு பணத்தேவை இருப்பதை அவர் அறிவார். பிலிப்பியர் 4:19இன் படி அவர் உங்கள் தேவைகள் யாவற்றையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளால் நிறைவாக்குவார் என்றும் வாக்குறுதி தந்திருக்கிறார். இப்போது நாம் ஒரு முக்கிய காரணத்தைத் மனதில் வைத்திருக்க வேண்டும். உங்கள் தேவைகளை நிறைவுசெய்ய அவர் அரிசி, பருப்பு,மரக்கறிகளை

பரலோகத்திலிருந்து வீசப்போவதில்லை. அதற்கான வழிமுறைகளை உலகில் செய்வார். வரட்சியானாலும், பஞ்சமானாலும அவர் உங்களை செழிப்பாயிருக்கும் வகையில் ஆசீர்வதிப்பார். ஆதியாகமம் 26:1-5 படி ஈசாக்கு பஞ்சத்தின் போது பயிர் நாட்டி அதே வருடம் நூறு மடங்கு அறுவடை செய்தான். ஏனெனில் கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

ஈசாக்கு ஆசீர்வாதத்தை பெற அவன் உலக ரீதியில் உழைக்க வேண்டியதாயிருந்தது. இம்முறையே கர்த்தர் இவ்வுலகில் அனுமதித்திருக்கும் முறையாகும். ஆதியாகமம்:3:19 படி ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட சாபமும் இதுவாகும். ஆகவே நாம் வேலை செய்து உழைத்து அதின் பலனை எம் ஊதியமாக, ஆதாயமாக பெறுவோம். எனவே நீங்கள் சொகுசாக சோம்பலாய் இருந்து உங்கள் கைக்கு யாவும் கிடைக்கும் என நினைக்கக்கூடாது.

என் நண்பர்களே நம்மிடம் பணம் இருப்பது ஒரு பாவமோ அல்லது தீமையானதோ இல்லை. ஆனால் எபிரேயர்:13:5, 1தீமோத்தேயு 6:9-10 ஆகிய வசனங்களின் படி பண ஆசையும் பணத்தின் மீதான இச்சையுமே தேவனாகிய கர்த்தர் பாவம் என கருதுகிறார். பணக்காரனாய் இருப்பது பாவமில்லை. அதனை இச்சிப்பது அதனை பெற எதையும் செய்வதே பாவம். இன்றைய உலகில் மனிதனானவன் பணத்தை பெற்றுக்கொள்ள எதையும் செய்ய தயாராக இருக்கின்றார். பணம் சம்பாதிக்க நீதியை மீறுவான், சொந்த பிள்ளைகளையும் விற்று சம்பாதிப்பான். பணத்திற்காக போலி கையொப்பமிடல் கண்ணியத்தை விற்றல் போன்ற அவமானகரமான காரியங்களையும் செய்வான். தேவனை விட பணம் தான் அவனுக்கு முக்கியம்.

பிரியமானவர்ளே பணத்தை நேசித்தல் பாவமாகும். நம் வாழ்க்கையில் பணமானது தேவனின் இடத்தை எடுக்கும் போது அந்த பணம் நமக்கு சாபமாக மாறிவிடுகிறது. உலகம் தரும் செல்வம் அழிந்து போவனவாகும். பிசாசு கொடுப்பதை திருப்பி எடுத்துக்கொள்ளும். ஆனால் இதைவிட பன் மடங்கு சிறந்ததே ஆண்டவருக்கு உகந்த நேரத்தையும், கணத்தையும் கொடுப்பது. அப்போது அவர் உங்களை நிறைவாக எல்லா விதத்திலும் ஆசீர்வதிப்பார். எனவே உங்களிடம் என்ன இருக்கிறதோ அதை குறித்து திருப்தி அடையுங்கள். நீங்கள் செல்வம் பின்னால் செல்வீர்களானால் பிசாசானவன் உங்களை குழியில் தள்ளிவிடுவான். 1 தீமோத்தேயு 6:17-19 படி "இவ்வுலகத்திலே ஐசுவாியமுள்ள இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நான் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாக கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும் நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரண குணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தை பொக்கிஷமாக வைக்கவும் உலகத்திற்கு வாழ அல்ல நித்திய ஜீவனுக்காக வாழ்வதாகும்". ஆம் பிரியமானவர்ளே நமது கண்ணோட்டம்

எப்போதும் பரலோகம் மீதே இருத்தல் அவசியம். தற்காலிகமான உலக ரீதியான காரியங்கள் மீது இருத்தல் ஆகாது.

இந்த அதிகாரத்தை முடிப்பதற்கு முன்னதாக ஆசீர்வாதம் என்றால் என்ன என்பதை விளக்க விரும்புகிறேன். யோவான் 14:27 படி "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக" என்று இயேசு கூறினார். சமாதானத்திற்கு எபிரேய மொழியில் "ஷாலோம்" மற்றும் கிரேக்க மொழியில் "ஐரின்" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுகிறது. அவ்வார்த்தைகளின் அர்த்தம் என்ன? அமைதி, ஓய்வு, சாந்தி, ஒற்றுமை, ஐக்கியம், மகிழ்ச்சி, செழிப்பு ஆகிய யாவுமே. இயேசு யோவான்:14:27இல் என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன் என்று கூறிய போது நான் உங்கள் வாழ்வில் அமைதி, ஓய்வு, சாந்தி, ஒற்றுமை, ஐக்கியம், மகிழ்ச்சி, செழிப்பு ஆகிய யாவற்றையும் உனக்கு தருகின்றேன் என்பதே ஆகும். ஆம் பிரியமானவர்ளே எவ்வளவு அதிசயமான இனிய ஆசிர்வாதங்களை கர்த்தர் நமக்கு வைத்திருக்கிறார். இதுவே வேதத்தில் கூறப்பட்ட ஆபிரகாம் தொடக்கம் யாவரும் அனுபவித்த சமாதானமாகும் ஆசிர்வாதமாகும். அவர்களிடம் சுகவாழ்வு, மன ஆறுதல், சமாதானம், சாந்தி யாவும் காணப்பட்டது.

அன்பானவர்களே உலகில் இருவித ஆசீர்வாதங்கள் உண்டு. தேவனுடையது ஒன்று மற்றையது பிசாசினுடையது. பிசாசானவனும் ஆசீர்வதிப்பான். ஆனால் அது தற்காலிகமானதும் சாபத்துடன் இணைந்தும் வரும் ஆசீர்வாதமாகும். ஆனால் தேவனால் மாத்திரமே சமாதானத்துடன் ஆசீர்வதிக்க முடியும். இயேசு கிறிஸ்து 40 நாட்கள் இரவும் பகலும் உபவாசித்த பின் பிசாசானவனின் சோதனைகளில் 3 வது சோதனையாக மத்தேயு 4:8-10 படி சாத்தான் மலை உச்சிக்கு இயேசுவை கொண்டு சென்று உலகத்தின் சகல ராஜ்யங்களையும் காண்பித்து அதன் ஆட்சி யாவற்றையும் தருவேன் என்னை வணங்கு என்றான். எனவே பிசாசு ஆசீர்வதிக்கும் போது பெயர், புகழ் மாத்திரமே கொடுக்கும். ஆனால் அவனை நாம் தொழுது கொள்ளவேண்டும். அவ்வாறு தொழுது கொண்டால் நேராக நரகத்திற்கே செல்லலாம். இதுதான் பிரசித்தி பெற்ற நடிகை, நடிகன், நபர்கள் வாழ்வில் நடப்பது. பெயர், புகழ் இருந்தாலும் சமாதானம் இல்லை. நாம் கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொள்ளாமல், அவரை கனப்படுத்தாமல் இருப்போமானால் நாம் மறைவாக பிசாசை கனம் பண்ணுகிறோம் என்பதே உண்மையாகும (1யோவான் 3:4-10).

எனவே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு உலகத்தில் நடைப்பெறும் காரியங்களை குறித்து கலங்கவே தேவையில்லை. ஏனெனில் கர்த்தர் நமக்கு ஒரு மிகுந்த வல்லமை நிறைந்த வாக்குத்தத்ததை தந்திருக்கிறார். அதுவே ஷாலோம் ஆகும். எனவே கர்த்தரின் ஷாலோம் ஆசீர்வாதம் இருக்கும் போது தினமும் வெற்றியே காணுவோம். எனவே கர்த்தரின் ஷாலோம் உங்களுக்கு

உண்டாவதாக. கர்த்தர் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

எனவே ஜெபிக்கும் போது கவலை, நம்பிக்கை இன்மை, பயம் ஆகிய யாவற்றையும் அகற்றி அவரை மாத்திரம் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் தேடுங்கள். இதை செய்யும் போது உங்கள் ஜெப வாழ்க்கை வல்லமை நிறைந்த ஜெப வாழ்வாயிருக்கும்.

# 9.
# பாவத்தை விட்டு விலகுங்கள்

கர்த்தருடைய ஜெபத்தை கற்று வரும் நாம், இப்போது வல்லமையான ஜெப வாழ்க்கைக்கான 5ஆம் அம்சத்திற்கு வந்திருக்கிறோம்.

**5 - எங்கள் பாவங்களுக்காக எங்களை மன்னித்தருளும்**

இப்பொழுது உலகில் ஒரு போதனை சொல்கிறது ஒரு முறை இரட்சிக்கப்பட்டால் நாம் இரட்சிக்கப்பட்டது நிச்சயம். இரட்சிக்கப்பட்ட பின்பும் பாவத்தில் வாழ்ந்தாலும் பரலோகம் செல்லலாம் என்று கூறுகிறார்கள். சிலர் இது கிருபையின் காலம் கிறிஸ்து எல்லா பாவங்களையும் மன்னித்துவிட்டார். எனவே பாவம் செய்தாலும் தொடர்ந்து பாவத்தில் வாழ்ந்தாலும அவர் மன்னிப்பார் என்று கடைசி காலத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். பிரியமானவர்களே இவ்வாறான போதனைகள் தவறான உபதேசங்கள் ஆகும். தேவனின் வார்த்தையில் அவ்வாறு கூறப்பட்டிருப்பதில்லை. இவை கடைசி கால கள்ள உபதேசங்கள் ஆகும். 2 தீமோத்தேயு 4:3-4 படி "ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாக சேர்ந்து கொண்டு, சத்தியத்துக்கு செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும்". பாவத்தை விரும்பி வாழும் மக்களை இத்தகைய போதனைகள் மிகவும் சந்தோஷபடுத்தும்.

ஆனால் வேதம் பாவம்,கிருபை,இரட்சிப்பு பற்றி என்ன சொல்கிறது என்பதை கவனமாக இப்போது பார்ப்போம். ரோமர் 6:1-4 "ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்". 2 தீமோத்தேயு 2:19 "ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது் கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும் கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும் அதற்கு முத்திரையாயிருக்கிறது." ஆம் பிரியமானவர்களே இந்த வசனங்களை வாசிக்கும் போது நமக்கு என்ன விளங்குகிறது? கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிற யாவரும் பாவத்திலிருந்து விலக வேண்டும். பாவ வாழ்க்கையை விட்டு

பரிசுத்தமான வாழ்வை வாழ்வதே உண்மையான கிருபையும் இரட்சிப்பும் ஆகும்.

முதலாவதாக கிருபை என்றால் என்ன? பாவிகளாக நாம் இருந்த போதும் (ரோமர் 5:8) அவர் எமக்காக மரித்தார். அவர் எம்மை இரட்சித்தது நாம் இரட்சிப்புக்கு தகுதியானவர்களாக இருந்தப்படியாலேயோ நற் கிரிகைகள் செய்தப்படியாலேயோ அன்று அவர் சிலுவையில் செலுத்திய பலியினாலே மாத்திரமே நாம் மீட்கப்பட்டோம்(யோவான்:3:16-18). இயேசுவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் பொழுது நாம் செய்த பாவங்கள் அனைத்தும் அவரின் பரிசுத்த இரத்ததால் கழுவப்படுகிறது (எபிரேயர்:9:12). எனவே நாம் தேவனின் முன்னிலையில் நிற்கும் போது நாம் பரிசுத்தவான்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளோம் (எபிரேயர்:10:10,14). இதுவே நாம் பெறும் தேவ கிருபையாகும். எனவே எங்கள் பழைய வாழ்க்கை முறைமை அவரால் மறக்கப்பட்டு மன்னிக்கப்பட்டுள்ளது. யாவும் புதிதாகியுள்ளது. (ரோமர் 5ம், 6ம் அதிகாரங்களை வாசிக்கும் படியாக கேட்டுக்கொள்கிறேன்).

கிருபையைப் பெற்றதும் நாம் பாவத்திலிருந்து விலகி வாழ வேண்டும். எபிரேயர்:10:26-31 விளக்குவது போல கிருபையை பெற்றும் பாவம் செய்வோமாயின், செலுத்த பலி ஏதுமில்லாததால் தேவனுடைய நியாயதீர்ப்பு எம்மேல் வரும். எபிரேயர் 10:26-31 "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள். பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பாரென்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளிலே விழுகிறது பயங்கரமாயிருக்குமே."

எனவே கிருபையைப் பெற்றதும் நாம் பாவத்தில் தொடர்ந்தும் வாழ முடியுமா என்பதற்கான விடை தீத்து புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. தீத்து 2:11-14 "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும்,

நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும் படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்." எனவே என் நண்பர்களே உங்களால் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு வந்த பின்பு பாவ வாழ்கையை தொடர முடியாது. எனவே நீங்கள் மீட்கப்பட்ட பின் அடுத்தபடியாக தேவனை பிரியப்படுத்தும் பரிசுத்த வாழ்வை வாழ வேண்டும்.

பரிசுத்தமாக வாழ்வதை நாம் ஒரு விளையாட்டு வீரர் ஒருவர் போட்டி ஒன்றிற்கு கலந்து கொள்வதற்கு முன்பதாக பயிற்சியில் ஈடுப்படுவதோடு ஒப்பிட்டு விளக்கம் கூறமுடியும். 1 தீமோத்தேயு 4:7-8இல் வேதம் கூறுகிறது "தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு. சரீர முயற்சி அற்ப கால பிரயோஜனமுள்ளது தேவபக்த்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கும் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது". தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு என்பது எதை கூறிக்கும்? பரிசுத்தமாய் இருக்க பயிற்சி பெறு என்பதே ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பு கூறுகிறது. ஒரு விளையாட்டு வீரன் எவ்வாறு போட்டியின் முன் பயிற்சி செய்து ஆயத்தமாகிறான் என்பதை சிந்தித்து பாருங்கள். கடுமையான உடற்பயிற்சியில் ஈடுப்படுவான். தக்க உணவுகளை சாப்படுவான். அந்த தங்க பதக்கத்தை பெறுவதற்கான பல தியாகங்களை தனது தனிப்பட்ட வாழ்க்கையில் செய்வான். அதுபோன்று நாமும் ஜீவ கிரீடத்தை பெறும் படியாக நாம் நமது வாழ்வை தேவனுக்கேற்றபடி வாழ்வதற்கு தேவையான சகல ஆயத்தங்களையும் செய்ய வேண்டும். பரிசுத்தமாக வாழ நமது வாழ்வில் ஒரு சில தியாகங்கள் செய்தல் அவசியம். பழைய பாவ வாழ்க்கையை விட்டு விட வேண்டும். அழுக்கான சினிமா படங்கள், தொலைகாட்சி நிகழ்ச்சிகள் ஆகிய யாவும் பார்ப்பதை நிறுத்தி விட வேண்டும். நாம் கண்ணால் பார்ப்பதெல்லாம், காதால் கேட்பதெல்லாம், போகும் இடங்களெல்லாம், செய்யும் செய்கைகள் எல்லாம், நடந்து கொள்ளும் விதம் எல்லாம் கர்த்தருக்கு பிரியமானதாக இருத்தல் அவசியம். எனவே இதற்கு அவசியமாகும் மாற்றங்களையும் தியாகங்களையும் செய்ய வேண்டும் என்பதே 1 தீமோத்தேயு 4:7-8ம் வலியுறுத்துகிறது.

2தீமோத்தேயு 2:22 "அன்றியும் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரை தொழுது கொள்ளுகிறவர்களுடனே நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு". இந்த வசனத்தை கேட்கும் பலர் இவ்வாறாக நமக்கு வாழ முடியாதே, இது எப்படியாகும் நாம் வாலிபர்கள், உலகத்தை அனுபவிக்க வேண்டுமே என்று கூறுலாம். பிரியமானவர்களே இது வரை பரிசுத்த வாழ்வை பற்றி விளக்கப்படுத்த நான் தெரிந்தெடுத்த வேத வசனங்கள் யாவுமே தீமோத்தேயு புத்தகத்திலிருந்தே ஆகும். தீமோத்தேயு என்பவன் ஒரு வாலிபன். நம்மை போல அவனும் பாவத்தின் சோதனையோடு போராடி கொண்டிருந்தான். அவனை உற்சாகப்படுத்தவும் சோதனைகளை மேற்கொள்ள அறிவுரை கூறவும் பவுல் இரு நிருபங்களை எழுதினார். ஏனெனில் அந்த காலத்திலும் இரட்சிக்கப்பட்ட பின்பும் பாவத்தில் வாழலாம் என்ற கள்ள உபதேசங்கள் பரவிக் கொண்டிருந்தது. 1 தீமோத்தேயு 6:20-21 "ஓ

திமேத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண் பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. சிலர் அதைப் பாராட்டி விசுவாசத்தைவிட்டு வழுவிப்போனார்கள். கிருபையானது உன்னோடே கூட இருப்பதாக."

ஆம் பிரியமானவர்களே சிலநேரம் உங்கள் நண்பர்கள், உங்களை உலகத்தின் இச்சைகளை அவர்களுடன் சென்று அனுபவிக்கும் படியாக கட்டாயப்படுத்தலாம். ஞாயிறு நாளன்று ஆலயத்துக்கு போய் கர்த்தரின் காரியங்களை செய் ஆனால் மற்றைய நாட்களில் எங்களுடன் வந்து உலகத்தையும் வந்து அனுபவித்து இன்பமாக இரு என்று தொந்தரவு செய்வார்கள். நானும் எனது வாலிப காலத்தில் இத்தகைய குரல்களை கேட்டிருக்கிறேன். அவ்வாறான அழைப்புகள் மிக கவர்ச்சியூட்டுகிற குரல்களாக இருந்தது. அவற்றை நானும் அனுபவிக்க வேண்டுமே என்ற சிந்தனைகள் என் இருதயத்தில் தோன்றின. ஆனாலும் பிரியமானவர்களே நாம் அத்தகைய சிந்தனைகளுக்கு அடிமை பட்டு பாவக் காரியங்களில் போய் ஈடுப்பட கூடாது.

ஏன் நாம் பரிசுத்தமாக வாழ்ந்து எமது பரிசுத்தத்தை பாதுகாத்து கொள்ளுதல் அவசியம்? அவற்றுக்கான பதில்கள் இதோ கீழ் வருகிறது.

1) 2தீமோ 1:9 "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலம் முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" அவர் நம் வாழ்க்கையை குறித்து வைத்திருக்கும் திட்டம் நிறைவேற பரிசுத்தம் அவசியம்.

2) 2தீமோ 2:3-6 "நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகனாய்த் தீங்கனுபவி. தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னை சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான். மேலும் ஒருவன் மல்யுத்தம் பண்ணாவிட்டால் முடி சூட்டப்படான். பிரயோசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கையடைவான" - அவரின் ஆசீர்வாதத்தை பெறும் படியாக.

3) 2தீமோ:4:7-8 "நல்ல போராட்டத்தை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தை காத்து கொண்டேன் இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது". - அவருடன் பரலோகத்தில் என்றென்றும் வாழும் அருளை உறுதிப்படுத்த.

நீங்கள் அவரால் தெரிவு செய்யப்பட்டவர்களாக இருக்கிறப்படியால் உலகத்திலிருந்து விலகி கர்த்தரை பிரியப்படுத்தும் வாழ்வை வாழுதல் அவசியம். அவருடைய பிள்ளைகள் யார் என்பதை அவர் அறிவார்(2தீமோ:2:19). உங்கள் வாழ்க்கையில் அவர் இல்லாவிட்டால், அவர் சித்தத்தை நீங்கள் அனுமதிக்காவிட்டால் நீங்கள் என்ன செய்தாலும் அது நன்மையான முடிவை காணாது. ஏனெனில் கர்த்தர் கரம் உங்களோடு

இருப்பதில்லை.

ஆகவே என் அன்பான நண்பர்களே எங்கள் பாவங்களுக்காக எங்களை மன்னித்தருளும என்று கூறி ஜெபிக்க கற்று தந்த காரணம் இதுவே ஆகும். ஒரு விளையாட்டு வீரர் ஒருவர் போட்டி ஒன்றிற்கு கலந்து கொள்வதற்கு முன்பதாக பயிற்சியில் ஈடுப்படுவதை போல நாமும் ஆவிக்குரிய பயிற்சியில் தினமும் ஈடுப்படுதல் வேண்டும். நாம் பரிசுத்தமாக வாழ நம்மை நாமே தேவனுக்கேற்றபடி வாழ்வதற்கு பழக்கப்படுத்த வேண்டும். பரிசுத்தமாக வாழ தேவையான தியாகங்கள் செய்தல் அவசியம். பிலிப்பியர் 2:12-16 படி "ஆதலால், எனக்கு பிரியமானவர்களே நீங்கள், எப்போழுதும் கீழ்படிகிறபடியே நான் உங்களுக்கு சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுத்துங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதநற்கு ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்". மாம்சமான நாம் அனைவரும் ஒரு சில சமயங்களில் தவறுகள் செய்ய முடியும், கர்த்தரின் கட்டளைகளை மீறி தெரிந்தும் தெரியாமலும் நடக்க கூடும். 1யோவான்:1:8 தொடக்கம் 2:6 வரையான வசனங்களை வாசிக்கும் போது கர்த்தரும் நமது பலவீனங்களையும் குறைவுகளையும் அறிவார் என்பதை காணலாம். ஆனாலும் அத்தகைய நேரங்களில் பரிசுத்த ஆவியானவர் நம் குறைவுகளை உணர்த்தும் போது நாம் மனந்திரும்பி கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டு நமது வாழ்வை சரிப்படுத்தி கொள்ளுதல் அவசியம். நிரந்தரமாக அந்த பாவத்தில் வாழ வேண்டாம். திரும்பவும் திரும்பவும் அதே பாவத்தை செய்தால் தேவன் எங்களில் இருந்து விலகி விடுவார். பிசாசானவன் உங்கள் ஜீவியத்தை ஆட்கொள்வான்.

தினமும் நாம் பரிசுத்த ஆவியானவரின் குரலை கேட்டு அவர் நம் வாழ்வில் செய்யும் மாற்றங்களுக்கு கீழ்படிந்து வாழ்க்கையை நடத்துதல் அவசியம். சங்கீதம்:139:23-24 "தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும்: என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்". ஒரு வல்லமை நிறைந்த ஜெப வாழ்வை அனுபவிக்க இந்த வசனம் சொல்லுவது போல உமக்கு வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று கேட்டு எம்மிருதயத்தில் உள்ள அவருக்கு ஏற்றதல்லா காரியங்களை அகற்ற உதவிசெய்யும் படியாக கர்த்தரிடமிருந்து கேட்டுக்கொள்ளுங்கள். இது உங்களை வல்லமையான ஜெபவாழ்க்கைக்குள் நடத்தி செல்வது மட்டுமல்லாமல் பரிசுத்தமாக இவ்வுலகில் வாழ்வதற்கு துணையாயிருக்கும்.

# 10.
# கசப்பை அகற்றி அன்பிலே நடக்கவும

வல்லமையான ஜெப வாழ்க்கைக்கு உதவும் 6 ஆம் அம்சமானது இயேசுவின் மனப்பான்மையும் நடத்தையும் நம் ஜீவியத்திலும் பிரதிபலித்துக்காணப்பட வேண்டும் என்பதை விலக்கி காண்பிக்கிறது.

**6 - எமக்கெதிராக பாவம் செய்பவர்களை மன்னிப்பது போல**

மத்தேயு 22:37-39 "பரிசேயன் ஒருவன் இயேசுவை நோக்கி சிறந்த கற்பனை என்னவென்று கேட்டபோது இயேசு உன் தேவனாகிய கர்த்தரை முழு இருதயத்தோடும் ஆத்மாவோடும் மனதோடும் அன்பு கூறுவாயாக, இதுவே பிரதான கட்டளையென்றும், இரண்டாவதாக உன்னை நேசிப்பது போல உன் அயலவனையும் நேசி என்றார்."

வல்லமையான ஜெப வாழ்க்கைக்கு நாம் இயேசுவை போல அன்பால் நிறைந்து நடப்பது அவசியமாகும். மனக்கசப்புடன் ஜெபிக்க முடியாது. எபேசியர் 4:31,32 படி "சகலவித கசப்பும்,கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது, ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களை மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள". தேவனின் பிள்ளைகளாகிய எமக்குள் தீய குணங்கள் இருப்பது நல்லதல்ல. உலகில் வாழும் யாவரும் உங்களுடன் நல்லுறவை வைத்திருக்க மாட்டார்கள். உலகில் வாழும் யாவரும் உங்களுடன் அன்பாய் நடந்து கொள்ளவும் மாட்டார்கள். அதற்கென்று தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் பலிவாங்குவது நல்லதல்ல. கசப்பும்,கோபமும், மூர்க்கமும உங்களை ஆட்கொள்ளுவது நல்லதொரு காரியமல்ல. அவை யாவும் பிசாசினுடைய குணங்கள் ஆகும்.

தேவ பிள்ளைகளாகிய நாம் சமுதாயத்தில் எவ்வாறாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை தேவனின் வார்த்தையிலிருந்து பார்க்க போகின்றோம். ரோமர்12: 9-21 ஆம் வசனங்கள் அதனைப் பற்றி விளக்கமளிக்கிறது. அவையாவன

1) வசனம் 9: உங்கள் அன்பு உண்மை வாய்ந்தாக இருப்பது அவசியம் - நாம் மற்றவர்களுக்கு என்ன காரியம் செய்தாலும் முழு மனதுடன் உண்மையாக அதனை செய்ய வேண்டும். மத்தேயு 25:14-30 வரையான வசனங்கள் கூறுவது போல உண்மையான ஊழியனாக எப்போதும் இருக்க வேண்டும்.
2) வசனம் 10: ஒருவருக்கொருவர் சகோதர அன்பில் இணைந்திருங்கள் - நாம்

யாவரும் நன்றி உணர்வை கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் எங்கள் கிறிஸ்தவர் மத்தியில் இதை இன்று காண்பது அரிதான ஒரு விஷயமாக இருக்கிறது. உதாரணமாக சிலர் அற்புதம் கிடைக்கும் வரை துதி ஆராதனைகளுக்கு சரியான நேரத்திற்கு வருவார்கள். ஆராதனை முடியும் வரை நின்று தனிப்பட்ட ரீதியில் போதகரிடம் ஜெபத்தையும் பெற்ற பின்பே ஆலயத்தை விட்டு செல்வார்கள். ஆனால் கர்த்தர் ஜெபத்தை கேட்டு அற்புதத்தை செய்த பின்பு அவர்களை ஆலையத்தில் காண்பதோ அரிதான ஒரு காரியமாகி விடுகிறது. ஏன் வரமுடியவில்லை என்பதற்கு வேடிக்கையான காரணம் கூறுவார்கள் - வீட்டு வேலை நிறைய இருக்கு பிரதர், நாய் பூணையை பார்க்க யாருமில்லாத படியால் நான் வர முடியாது, தேவன் என்னோடு பேசி வீட்டில் இருந்து நீ ஜெபி என்றார் போன்ற பல்வேறு காரணங்கள் கூறுவார்கள். என் நண்பர்களே வாசித்து சிரிப்பு வந்த விட்டதா? ஆம் இத்தகைய வேடிக்கையான சாக்கு கூறி நன்றி இல்லாதவர்களாக இருப்பார்கள். ஆனால் நீங்களோ அவ்வாறு இருக்க வேண்டாம். அற்புதத்தை செய்பவர் சபை போதகர் அல்ல தேவனே அதை செய்தார். ஆகையால் நன்றி உணர்வோடு தேவன் செய்த நன்மைகளை சாட்சியாய் கூற எந்நாளும் அற்புதத்தை செய்த தேவனுக்கும் உங்களுக்காக ஜெபித்த போதகர்களுக்கும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அதே போன்று யாராக இருந்தாலும் கூட அவர்கள் நம்க்கு ஒரு நன்மையை செய்திருந்தால் எந்நாளும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். கர்த்தர் நம்மிடமிருந்து அதை எதிர்ப்பார்க்கிறார்.

3) வசனம் 10: உங்களைவிட மற்றவர்களை கனம் பண்ணுங்கள் - எதற்கும் பொறாமைப்படாமல் யாவரையும் கனம் பண்ணுங்கள். யாராவது ஆசீர்வதிக்கப்பட்டால் சந்தோஷப்படுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். பொறாமையை உங்களின் வாழ்விலிருந்து அகற்றி விடுங்கள். மற்றவர்கள் நன்றாக இருப்பதை காண்பது இலங்கையர்களுக்கு மிகவும் கடினமானதொன்றாகும். எனது அப்பா எனக்கொரு கதையை கூறுவார். ஒரு பேரரசர் ஒருவர் உலகிலிருக்கும் எல்லா நாடுகளையும் யுத்தம் செய்து கைப்பற்றி விட்டார். கைதுச் செய்த மக்களை அவர்கள் சேர்ந்த நாட்டின் அடிப்படையில் வேறு வேறாக சிறைக்குழிகளுக்குள் போட்டு விட்டார். ஒரு நாள் இந்த பேரரசர் சிறை கைதிகளை கண்காணிப்பதற்கு வந்தார். அங்கே வந்து சிறை கைதிகளை கண்காணிக்கும் போது பேரரசர் ஒரு சேவகனை நோக்கி கேட்டாராம் “எல்லா சிறைக்குழிகளுக்கும் ஒரு காவலாளி உண்டு ஏன் இக்குழியில் மட்டும் ஒரு காவலாளி இல்லை?“ அதற்கு அந்த சேவகன் கூறினாராம் “ஐயா! இது இலங்கை கைதிகளின் குழி. ஒருவன் ஏற முனையும் போது மற்றவன் கீழே இழுக்கிறான். எனவே அவர்கள் தப்பி செல்ல மாட்டார்கள்“. இது உண்மைதானே. மற்றவர்கள் நன்றாக இருப்பதை காண்டால் உடனே சென்று சூனியம் செய்து விடுவார்கள். எனவே நண்பர்களே தேவ

பிள்ளைகளாகிய நீங்கள் ஒருவர் ஆசீர்வதிக்கப்பட்டால் பொறாமைப்படாமல நீங்கள் அவர்களை ஆசீர்வதியுங்கள். அப்பொழுது உங்களின் பரம பிதா உங்களை ஆசீர்வதிப்பார்.

4) வசனம் 11: அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் ஆவியிலே அனலாயிருங்கள் கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். - எப்பொழுதும் கர்த்தரைப் பற்றி மற்றவர்களுக்கு கூற ஆயத்தமாக இருங்கள். ஆவிக்குரிய காரியங்களில் நாம் உற்சாகமாக இருத்தல் அவசியம்.

5) வசனம் 12: நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். உபத்திரவத்தில் பொறுமையாயிருங்கள். ஜெபத்தில் உறுதியாய் இருங்கள். வாழ்வில் எந்த நிலைமையிலும் நமது சந்தோஷத்தையும் சாமாதானத்தையும் இழக்க கூடாது. வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் நமக்கு வேண்டிய நேரத்தில் அற்புங்கள் நடக்காமல் இருக்கலாம். ஏனெனில் கர்த்தர் அவர் நம்க்கு வைத்திருக்கும் திட்டத்தின் படியும் நேரத்தின் படியும் சகல காரியங்களையும் நிறைவேற்றுகிறவர். அவ்வாறான நிலைமைகளில் நாம் கர்த்தருக்கு எதிராக பேசாமல் நம்பிக்கையுடன் பொறுமையாயிருக்க வேண்டும். நாம் பொறுமையாயிருக்க அவர் நம்மை கழுகை போல் உயர பறக்க செய்வார் (எசாயா 40:31). அவரின் சந்தோஷம் நமக்கு பெலனை தரும் (நெகேமியா 8:10).

6) வசனம் 13: அந்நியரை உபசரிக்க நாடுங்கள் - ஒருவருக்கு உதவி அவசியம் என்றால் அவருக்கு முழு மனதோடு உதவி செய்யுங்கள். யாக்கோபு:2:14-17ம் வசனங்களின் படி நமது விசுவாசமானது நமது கிரியைகளிலும் காணப்படுதல் அவசியம். கிரியை இல்லாத விசுவாசம் ஒன்றுக்கும் உதவாது.

7) வசனம் 14: உங்களை துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். அவர்களை சபியாதிருங்கள் - ஒருவரை உங்களின் வாயினால் சபிப்பது தேவனுக்கு பிரியமற்ற ஒரு காரியமாகும். பிரர் மீது மரணத்தையும் அழிவையும் பேசும் படியாக உங்கள் நாவை பயன்படுத்த வேண்டாம். உங்கள் நாவு மற்றவர்களை அசீர்வதிக்கவும் உற்சாகப்படுத்தவும் பெலனடைய செய்யவும் பாவிப்பது கர்த்தரை மிகவும் பரியப்படுத்தும்.

8) வசனம் 15: சந்தோஷப்படுகிறவர்களுடன் சந்தோஷப்படுங்கள். அழுகிறவர்களுடன் அழுங்கள். - உங்களிடம் ஒருவர் தன் துக்கத்தை கூறினால் ஒரு ஆலோசகராக இருந்து ஆலோசனை கூறுங்கள். மற்றவர்களின் குறைகள் பழைய வாழ்வு பற்றி பேசும் ஒருவராக இருக்காமல் நீங்கள் பலரை நீதியின் பாதையில் வழி நடத்தும் ஒரு சவிசேஷகராக தினமும் இருப்பது மிகவும் அவசியம்.

9) வசனம் 16: ஒருவரோடு ஒருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள் மேட்டியானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்.

நாம் உண்மையான தேவ பிள்ளைகளாக இருப்போமேயானால் நாம் யாவருக்கும் சமமாக மரியாதை செலுத்தி எல்லோருடனும் பழகுவோம். ஜாதி, வாழ்க்கை பின்னனி, சமுதாய நிலைமை, பொருளாதார நிலைமை போன்ற வேறுபாடுகள் இல்லாமல் யாவருடனும் அன்புடன் பழகுவோம். நமக்குள் பெருமையே இருக்கக்கூடாது. கர்த்தர் பெருமையுள்ளவர்களை வெறுக்கிறார். வித்தியாசம் காட்டி பாரபட்சமாய் நடப்பவர்களை வெறுக்கிறார். ஆகவே பரலோகம் செல்ல வேண்டுமேயானல் பெருமையை நாம் எங்கள் வாழ்விலிருந்து அகற்றி விட வேண்டும். அனைவரோடும் தாழ்மையோடு பழகுங்கள்.

10)வசனம் 17: ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள் - நேர்மையான பாதையில் நடங்கள். போதிப்பதை கடைப்பிடியுங்கள். நமது செய்கைகள் எல்லா விதத்திலும் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும். லஞ்சம் வாங்குவது, கொடுப்பது யாவும் தீமையாகும். நீதியின் பாதையில் நடந்தால் கர்த்தர் உங்கள் வாழ்வில் வெற்றியையும் உயர்வையும் தருவார்.

11)வசனம் 18: கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் -

நாம் சண்டை போட்டு ஐக்கியத்தை அழிக்கும் நபர்களாக இருக்காமல்; எங்கிருந்தாலும் (வீட்டில், வேலை செய்யும் இடத்தில் அல்லது பாடசாலையில்) சமாதானத்தை பராமரிக்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும். ஆனாலும் பவுல் அப்போஸ்தலன் ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளுகிறான். சில ஆட்களுடன் சமாதானமாயிருப்பது கடினமானதொரு விஷயமாக இருக்கலாம். ஏனெனில் அவர்கள் சண்டை போடும் ஐக்கியத்தை அழிக்கும் நபர்களாக இருப்பதினாலேயே. அத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை தீத்து 3:10-11 வரையான வசனங்கள் நமக்கு அறிவுரை கூறுகிறது. தீத்து 3:10-11இன் படி பிரிவினையை உண்டாக்கும் அந்த நபருக்கு இரு முறை எச்சரிக்கை செய்தும் தனது குணத்தை மாற்றாமல் இருந்தால் அவர்களுடன் தொடபு வையாமல் இருக்கும் படி நமக்கு அறிவுரை கூறுகிறது. இவ்வாறானவர்களை நாம் அனுதினம் வேலை செய்யும் இடத்தில் அல்லது ஆலயத்தில் காணும் சந்தர்ப்பங்கள் உருவாகலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களுடன் குறைவாகவே நட்பு வைத்து குறைவாகவே பேசி இருப்போமேயானால் சண்டை சச்ரவை தவிர்த்து நாம் சமாதானத்தை பராமரிக்கிறவர்களாக நடந்து கொள்ள முடிகிறது.

12)வசனம் 19: "பிரியமானவர்களே பழிவாங்குதல் எனக்குரியது நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால் நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்." யார் எதை செய்தாலும் பழிவாங்காதீர்கள். அது

கர்த்தருக்குரியது. யுத்தம் கர்த்தருக்குரியது. அவர் அதை பார்த்து கொள்வார். சங்கீதம் 105:15 “நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமல் என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்றார்.“ சகரியா:2:8-9 படி “உன்னை தொடுகிறவன் என் கண்ணில் மணியை தொடுகிறான்” என்று வேதம் சொல்லுகிறது. அவர்களை கர்த்தர் நியாயம் தீர்ப்பார்.

மேற்கூறிய 12 குறிப்புகளும் சமுதாயத்தில் மற்றவர்கள் முன்பதாக கிறிஸ்தவன் ஒருவனால் கடைபிடிக்க வேண்டிய மிகவும் முக்கியமான 12 கற்பனைகளாகும். பிரியமானவர்களே ரோமர் 12:21 தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு என்று நமக்கு அறிவுரை சொல்லுகிறது. ஆம் பிரியமானவர்களே நாம் இயேசுவை போல் வாழும் போது சகல தீமையை நன்மையினாலே வெல்ல முடிகிறது. அவ்வாறு நாம் நமது வாழ்க்கையை நடத்தும் போது நாம் ஜெபத்திற்குள் மனக்கசப்பு கோபம் ஆகிய யாவும் இல்லாத இருதயத்துடனும் தூய பரிசுத்த கரங்களுடனும் ஜெபிக்க முடிகிறது. அன்பினால் நிறைந்து நடப்பவரின் வாயிலிருந்து வரும் ஜெபமானது வல்லமை நிறைந்ததாக இருக்கும்.

# 11.
# சோதனைகள்

வல்லமையான ஜெப வாழ்க்கைக்கு உதவும் 7 ஆவதும் இறுதியுமான அம்சமாக விளங்கும் விஷயத்தை இப்போது தியானம் செய்வோம்.

**7 - சோதனைக்குட்படுத்தாமல், எம்மை இரட்சித்து கொள்ளுங்கள்.**

ஏன் இயேசு இவ்வாறாக நம்மை ஜெபிக்க கூறுகிறார்? யோவான்:16:33இல் இயேசு கூறுகிறார் "என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்கு சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடம் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்." கிறிஸ்துவுக்காக வாழ்வது இலகுவான ஒரு பயணமாக இருக்காது. இயேசு லூக்கா 13:24இல் இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்க பிரயாசப்படுங்கள் என்று கூறினார். ஏன் இயேசு அவ்வாறு கூறினார்? காரணம் வாழ்வில் ஜெயங்கொள்ளுகிற விசுவாசிகளை மட்டுமே அவருடைய ராஜ்யத்திற்குள எதிர்பார்க்கிறார் (வெளி 3:5 மற்றும் 3:21). இந்த காரணத்திற்காக நமது விசுவாசம் தேவனால் பரீட்சித்து பார்க்கப்படும். 2தீமோத்தேயு:4:7-8 படி "நல்ல போரட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது." நமது விசுவாசம் பரீட்சித்து பார்க்கப்படும் போது நமக்கு எதிராக வரும் சோதனைகள் யாவையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெயங்கொள்ளுகின்றோம். அவ்வாறு ஜெயங்கொள்ளுகிறவர்களாக நாம் இருக்கும் போது, வாழ்க்கை என்னும் ஓட்டத்தை நாம் முடித்து பிதாவாகிய தேவன் முன்னில் நிற்கும் போது என் விசுவாசத்தை காத்துக்கொண்டேன் என்று நமக்கு உண்மையாக கூறமுடிகிறது. என்ன வந்தாலும் என்ன நடந்தாலும் நாம் நமது விசுவாசத்தை காத்துக்கொள்ளுதல் அவசியம்.

ஏன் எம் விசுவாசத்தை கர்த்தர் பரீட்சிக்கிறார்?

1) யாக்கோபு:1:1-4 "என் சகோதரரே நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றும் குறையுள்ளவறாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது". விசுவாசத்தை திடப்படுததி ஆவிக்குரிய விஷயங்களில் வளர்ச்சியடையவும் அவர் நமது விசுவாசத்தை பரீட்சிக்கிறார்.

2) யாக்கோபு:1:12 “சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தை பெறுவான்” பரலோகத்தை சென்றடையவும் ஜீவகிரீடத்தை பெறவும் அவர் நமது விசுவாசத்தை பரீட்சிக்கிறார்.

3) 1பேதுரு:1:6-7 “இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள் என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமானதல்ல. இப்பொழுது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகின்ற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். ஆமென் நீங்கள் கர்த்தரின் இரண்டாம் வருகையின் போது எடுத்துக்கொள்ளப்படுவதற்கான தகுதியை பெறவும் அவர் நமது விசுவாசத்தை பரீட்சிக்கிறார்.

எனவே வாழ்க்கை பயணத்தில் சோதனைகள் வரக்காரணம் மேற்கூறிய 3 விடயமும் நிறைவேறவே ஆகும். அதற்கென்று உங்கள் வாழ்க்கை எப்பொழுதுமே சோதனை உடையதாகக் காணப்படாது. ஒரு முறை “நான் யோர்தான் நதிக்கருகில் வரும்போது எதை செய்வேன்“ என்ற தலைப்பில் ஒரு செய்தியை என்னுடைய கொழும்பு ஆராதனை ஒன்றில் பகிர்ந்து கொண்டேன். அந்த செய்தி வேதாகமத்தில் பலரின் வாழ்க்கை பயணத்தில் கர்த்தர் அவர்களின் வாழ்வை குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் படியாக அவர்களை யோர்தான் நதிக்கரைக்கு வரவழைத்து அங்கு அவர்கள் எடுத்த தீர்மானத்தின் படியே வாழ்க்கையும் எப்படி மாறியது என்பது பற்றிய ஒரு உபதேசம் ஆகும். உதாரணமாக ஆபிரகாமும், லோத்தும் யோர்தான் நதிக்கருகில் வந்து லோத் அவனுடைய மாம்ச கண்களுக்கு அழகாக காணப்பட்ட இடமான சோதோம், கொமோரா ஆகிய இடங்களை தனது வசிப்பிடமாக தெரிந்துக் கொண்டான். ஆபிரகாமோ வரண்ட பூமியாக இருந்த கானான் தேசத்தை தேர்ந்து எடுத்தான். வரண்ட நிலமாக அது இப்போது காணப்பட்டாலும் அதுவே எதிர் காலத்தில் பாலும் தேனும் வழியும் தேவனால் வாக்களிக்கப்பட்ட தேசமாக இருந்தது. ஆபிரகாமோ தேவனை விசுவாசித்து அவர் தந்த வாக்குத்தத்தங்கள் மீது நம்பிக்கையை வைத்து தீர்மானங்களை எடுத்தான். அவ்வாறு ஆபிரகாம் செய்தப்படியால் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான். ஆகவே நான் கூறுவது என்னவென்றால் சோதனைகள் நிரந்தரமல்ல. தேவன் உங்களின் வாழ்க்கை பயணத்தில் உங்கள் விசுவாசத்தை பலப்படுத்தும் படியாக சில சூழ்நிலைகள் ஊடாக நம்மை கடந்து போகும் படியாக வழிசெய்வார். விசுவாசத்துடன் அந்த சூழ்நிலைகளை ஜெயிக்கும் போது ஆசீர்வாதம் வரும். யோபு சோதனைக்குள் கடந்து

சென்றாலும் அவன் வெளிவரும் போது அவன் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டான் (யோபு:42:12). இஸ்ரேலர்கள் எகிப்திலிருந்து வெளியே வந்தப் போது கர்த்தர் அவர்களை வனாந்தர அனுபவத்தின் ஊடாக கடந்து செல்லும் படியாக செய்தார். அவர்களை வனாந்தர அனுபவத்தின் ஊடாக எடுத்து செல்வதற்கான காரணம் அவர்கள் யாரை விசுவாசிக்கிறார்கள் என்பதை அறியும்படி அவர்களை வனாந்தரத்தில் நடக்கச்செய்தார். இயேசு 40 நாள் இரவும் பகலும் பிசாசினால் சோதிக்கபடும்படி இருந்தது. 40ம் நாளின் பின் சோதனை முடிவுக்கு வந்தடைந்தது. ஆகவே நம் வாழ்க்கை பயணத்தில் உயர்வு ஆசிர்வாதம் ஆகியவற்றுக்கு முன்பதாக சோதனைகள் வரும். ஆனால் எல்லா சோதனைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. வாழ்க்கை முழுவதும் சோதனையின் பின் சோதனையாக இடைவிடாமல் தேவன் அனுப்பி கொண்டிருப்பதில்லை.

எனவே தேவ பிள்ளைகளே நீங்களும் உங்கள் வாழ்க்கையில் மலையைப் போல பெரிதான சோதனையை உங்கள் முன் இன்று காண்பீர்களேயானால் அது (மத்தேயு:17:20-21) பெயர்ந்து போகும்படி விசுவாசியுங்கள். நீங்கள் வாழ்க்கைக்குரிய சகல காரியங்களிலும் விசுவாசத்துடன் கர்த்தரின் மீது மட்டும் நம்பிக்கையை வைத்து ஜெபத்தினாலும் தேவ வசனத்தினாலும் எல்லா சவால்களையும் சோதனைகளையும் மேற் கொள்ளும் போது வெற்றியை நிச்சயமாக காணுவீர்கள். நல்ல போராட்டத்தை போராடி ஜெயம் கொள்ளும் போது இவ்வுலகில் ஆவிக்குரிய ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஆசீர்வதிக்கப்பட்டு பரலோகத்தில் ஜீவ கிரீடத்தையும் பெற்றுக்கொள்வீர்கள்.

எனவே பிரியமானவர்களே நாம் வல்லமையான ஜெப வாழ்க்கைக்கு உதவும் முதல் 6 அம்சங்களாலும் நிரம்பி வாழும் போது நாம் ஆவியால் வழிநடத்தப்படும் நபர்களாக மாற்றப்பட்டு சங்கீதம்:18:28-40இல் கூறப்பட்டிருக்கும் சங்கீதக்காரனை போல் இருப்போம்.

சங்கீதம்:18:28-40 "தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்: என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார். உம்மால் நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்: என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன். தேவனுடைய வழி உத்தமமானது: கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார். கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றிக் கன்மயலயம் யார்? என்னைப் பலத்தால் இடைகட்டி என் வழியைச்செவ்வைப்படுத்துகிறவர் தேவனே. அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார். வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி என் கைகளை யுத்ததிற்குப் பழக்குவிக்கிறார். உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்: உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது: உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும். என் கால்கள் வழுவாதபடிக்கு நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர். என் சத்துருக்கனைப் பின்தொடர்ந்து அவர்களைப் பின் தொடர்ந்து அவர்களைப்

பிடிப்பேன்: அவர்களை நிர்மூலமாக்கும் வரைக்கும் திரும்பேன். அவர்கள் எழுந்திருக்கமாட்டதபடிக்கு என் பாதங்களின்கீழ் விழத்தக்கதாக அவர்களை வெட்டினேன். யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர். நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்."

சங்கீதம்:18:28-40 வரையான வசனங்களை வாசிக்கும் போது உங்களுக்கு சங்கீதக்காரனை பற்றி என்ன விளங்குகிறது? எனக்கென்றால் கர்த்தருக்குள் அசைக்கமுடியாத நம்பிக்கையால் நிரம்பிய ஒரு மனிதனின் மனம் வெளிப்படுகிறது. எனவே என் நண்பர்களே வல்லமையான ஜெப வாழ்க்கைக்கு உதவும் 7வது அம்சமானது விசுவாசமே ஆகும். சகல காரியங்களை குறித்தும் உங்கள் கண்களை கர்த்தரின் மீது மட்டுமே வைத்து அவரின் கையை பிடித்து அவர் மீது மட்டுமே நம்பிக்கையை வைத்திருப்பதே விசுவாசமாகும். விசுவாசத்தால் நிறைந்து நடக்கும் போது நீங்கள் மேகங்களைப் பார்த்து மழை பெய்யாதே என்று கூறினால் மழை பெய்யாது ஏனெனில் கர்த்தரே அதற்கு பதில் தருவார் என்ற விசுவாசம் உங்களை ஆட்கொண்டுள்ளது. எனவே நீங்கள் விசுவாசத்தால் நிறைந்து நீங்கள் அமர்ந்து ஜெபம் செய்யும் போது அது பூமியை மட்டுமல்லாமல் பரலோகத்தையும் அசைத்து அற்புதங்களை நடக்க செய்யும் (மத்தேயு 16:11). ஜெபமானது தேவப் பிள்ளையின் கையில் ஒரு வல்லமையான ஆயுதமாகும் (யாக்கோபு 5:16) என்பது இப்போது உங்களுக்கு விளங்கி கொள்ள முடிகிறது என்று நான் நம்புகிறேன்.

# 12.
# சுகத்திற்காக ஜெபம் செய்வது

**யாக்கோபு:5:15 "அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவர்".**

தேவபிள்ளைகளே உங்களுக்கு சுகமளிக்கும் ஊழியம் செய்ய வாஞ்சை இருக்கலாம். சுகமளிக்கும் வரமானது பரிசுத்த ஆவியின் மூலம் கிடைப்பதாகும். அந்த வரமானது உங்களினூடாக செயற்பட நீங்கள் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும். அப்படி என்றால் என்ன? நீங்கள் ஒருவருக்காக ஜெபம் பண்ணும் போது அவர் சுகம் பெறுவார் என்ற விசுவாசம் இருக்க வேண்டும். ஜெபிக்கும் போது சுகம் பெறுவாரா என்ற சந்தேகத்தோடு ஜெபிக்காமல் விசுவாசத்தோடு ஆம், நான் ஜெபிக்கும் போது அவர் சுகமடைவார் என்ற நம்பிக்கையோடு நாம் பிறருக்கு ஜெபிக்க வேண்டும். அப்போஸ்தலர்:3:6-7இல் பேதுருவும், யோவானும் ஆலயத்திற்கு செல்கையில் வாசலருகே ஒரு முடக்குவாதமுடையவனை கண்டார்கள். அப்பொழுது பேதுரு வெள்ளியும், பொன்னும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்திலுள்ளதை உனக்கு தருகிறேன். நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எழுந்து நட என்று சொல்லி, வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால்களும், கரங்களும் பலன் கொண்டது. பாருங்கள் அந்த முடவனுக்கு எவ்வித விசுவாசமுமே இருக்கவில்லை. ஆனால் பேதுருவோ விசுவாசத்துடன் வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிட்டான். இயேசுவின் மீது இருந்த அந்த விசுவாசம் சுகத்தைக் கொண்டு வந்தது.

இரண்டாவதாக ஒரு விசுவாசமுள்ள ஜெபம் கேட்கப்பட அது நீதிமானின் உதடுகளிலிருந்து வெளிவரவேண்டும். யாக்கோபு:5:16 படி நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் பலனுள்ளதாயிருக்கும். ஊழியத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பதாக நாம் முதலில் பரிசுத்தமான ஜீவியம் வாழ்வது அவசியம் அல்லது அப்போஸ்தலர்:19:14-16இல் ஸ்கோவாவின் 7 குமாரருக்கு நடந்தது போல உங்களுக்கும் நடக்கலாம். ஸ்கோவாவின் 7 குமாரரும் ஒரு அசுத்த ஆவியை துரத்த முயற்சி செய்தப் போது அந்த அசுத்த ஆவி அவர்களை நோக்கி இயேசுவை அறிவேன் பவுலையும் அறிவேன் நீங்கள் யார் என்று சொல்லி அந்த பொல்லாத ஆவியுடைய மனிதன் அவர்கள் மேல் பாய்ந்து பலாத்காரம் பண்ணி அவர்களை மேற்கொள்ள அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். ஆகவே பிரியமானவர்களே சகமளிக்கும் விடுதலை ஊழியம் செய்ய வேண்டுமானால் நமது வாழ்க்கை பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

எனவே என் நண்பர்களே உங்களுக்கும் கர்த்தர் சுகமளிக்கும் வரனை கொடுத்திருந்தால் அதனை பேதுருவை போல விசுவாச நம்பிக்கையுடன் உபயோகிக்கும் போது கர்த்தர் பரலோகத்திலிருந்து உங்களுக்கு பதில் கொடுப்பார். அற்புதங்கள் நடைப்பெறும். பிசாசுகள் ஓடிப்போகும்.

# 13.
# ஜெப வீரன்

நண்பர்களே நான் இது வரை ஒரு வல்லமையான ஜெபவாழ்க்கைக்கு எம்மை எவ்வாறு தயார் செய்வது என்பதை பற்றி கற்றுக்கொடுத்தேன். இந்த அத்தியாயத்தில் நான் ஜெப வீரர்களை பற்றி கற்றுத் தருகிறேன்.

தேவன் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரை அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்கவும், நோய்களை குணமாக்கவும், பேய்கள் ஓட்டவும் அழைத்திருக்கிறார். நீங்கள் இவ்வாறான ஊழியர்களுடைய சபைக்கு செல்லும் விசுவாசிகளாக இருக்கலாம். இந்த ஊழியங்களை பார்த்து நீங்களோ உங்களை பற்றி இவ்வாறாக நினைத்து இருக்கலாம். நான் ஒரு சாதாரண விசுவாசிதானே! இந்த தேவ ஊழியனை போல நான் பொது கூட்டங்களை வைப்பதில்லை எனக்கு தேவனின் ஊழியத்தில் முக்கிய பங்கு இல்லை என்று நினைக்கலாம். எனக்கு பிரியமானவர்களே நீங்கள் அவ்வாறு நினைக்காதீர்கள். சபை விசுவாசிகளான நீங்களும் தேவனுடைய ஊழியத்தில் ஒரு முக்கிய பங்குவகிக்கிறீர்கள். தேவன் எப்போதும் மனிதர்களை ஒரு கூட்டமாக அழைத்து ஊழியத்தில் பயன்படுத்துகிறவர். இயேசு 70 பேரை இருவர் இருவராக ஊழியத்திற்காக அனுப்பினார். பவுலும் ஊழியத்திற்காக செல்லும் போது பார்னபாவுடன் அல்லது வேறு நபர்களுடன் கூட ஒரு குழுவாகவே சென்றார். பவுல் எழுதிய நிருபங்களையும் அப்போஸ்தலருடைய நடபடிகளையும் வாசிக்கும் போது சபை விசுவாசிகளே பவுலுக்காக ஜெபித்து அவரை ஊழியத்திற்காக அனுப்பி வைத்தார்கள் என்பதை நாம் காணலாம். ஆம் பிரியமானவர்களே ஊழியத்தக்காக தேவ மனிதர்களை அனுப்பி வைப்பதில் விசுவாசிகளான நீங்களே முக்கிய பங்கு வகிக்கிறீர்கள். பிலிப்பியர்:1:5 படி விசுவாசிகள் ஊழியத்தின் பங்காளர்களாவார்கள். பங்காளர் என்றால் தசமபாகத்தில் மட்டுமல்ல ஜெபத்திலும் கூட ஆகும்.

எபேசியர்:6:19-20 “சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத்திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்கு கொடுக்கும்படி எனக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்”. ஊழியத்திற்காக ஊழியர்கள் கடந்து செல்கையில் அவர்களை ஜெபத்தால் நாம் மூடி வைத்திருப்பது அவசியமாகும். காரணம் நாம் யுத்தம் செய்வது அதிகாரத்தின் அசுத்த ஆவிகளோடாகும். எனவே தேவ மனிதர்களின் ஊழியங்களை எக்கட்டுக்களும் தடைப்பண்ணாமல் இருக்க நாம் ஜெபம் செய்வது அவசியமாகும். நாம் ஜெபம் செய்யும் போது அவ்வித ஆவிகளை தோற்கடிக்கின்றோம். எனவே நான் ஒரு சாதாரண

விசுவாசி என்று நினைக்காதீர்கள். நீங்கள் அவர்களின் ஊழியங்களை தாங்கும் ஜெபவீரர்கள். படைத்தளத்தில் போர்வீரன் எவ்வளவு முக்கியமானவனோ அந்தளவு நீங்களும் முக்கியமானவர்கள். நீங்கள் ஜெப தீர்க்கதரிசிகள். தீர்க்கதரிசி எனும் போது உங்களுக்கு எலியா, எலிசாவும் ஞாபகத்துக்கு வரலாம். ஆனால் தேவன் அவரின் சித்தத்தை நிறைவேற்றும் படியாக ஒரு குறிப்பிட்ட அபிஷேகத்துடன் விசேஷமான தீர்க்கதரிசிகளை ஏற்ற காலத்தில் எழுப்புகிறவராய் இருக்கிறார். அத்தகைய ஒரு தீர்க்கதரிசியை பற்றி நாம் இப்போது பார்ப்போம்.

லூக்கா:2:36:38 "ஆசேருடைய கோத்திரத்தாளும் கானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள். அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமான முதல் 7 வருடம் புருஷனுடனேயே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய 84 வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள். அவரும் அந்நேரத்திலே வந்து நின்று கர்த்தரை புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாக காத்திருந்த யாவருக்கும் அவரை குறித்து பேசினாள்".

அன்னாள் என்பவள் தேவனால் ஒரு குறிப்பிட்ட நோக்கமும் அபிஷேகத்துடனும் எழுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி. அவள் பெரிய அற்புதங்கள் செய்யவில்லை. ஆனால் அவளுடைய அழைப்பு இரவும், பகலும் உபவாசித்து ஜெபம் செய்வதாகும். அவளுடைய அழைப்பு சாதாரண ஜெபத்திற்காக இல்லாமல், மெசியாவின் வருகைக்காக இருந்தது. அதே போல நாமும் உலகத்திற்காக சபைக்காக யாவற்றிற்கும் மேலாக அவருடைய வருகைக்காக ஜெபம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். இதுவே தீர்க்கதரிசின ஜெபமாகும். அன்னாள் மெசியாவின் பிறப்பிற்காக ஜெபித்தது போல இன்று அநேக அன்னாள்கள் அந்தரங்கத்தில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஜெபித்து வருகிறார்கள்.

அன்னாளின் ஜெபத்தை போல் ஏன் தீர்க்கதரிசிகளின் ஜெபம் அவசியம்? நீதிமொழிகள்:15:8 "செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்கு பிரியம்". நீதிமொழிகள் 15:29 "நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்". யாக்கோபு 5:16-18 "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் (ஜெபம்) பெலனுள்ளதாயிருக்கிறது. ஏலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்இ மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான் அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான் அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது பூமி தன் பலனைத் தந்தது."

பிரியமானவர்களே எலியா ஜெபித்தப் போது மாம்சத்துக்குரிய உலகம் அவனுக்கு கீழ்ப்படிந்து மழையை நிறுத்தவும் திரும்பவும் பெய்யவும் செய்தது. தேவனுடைய வசனம் கூறுவது போல நீதிமானுடைய ஜெபமோ வல்லமை

நிறைந்தது; ஆவிக்குரிய உலகிலும் நாம் காணும் மாம்சத்துக்குரிய உலகிலும் அந்த ஜெபம் மாற்றங்களை கொண்டுவரும். எனவே கர்த்தர் கூறிப்பிட்ட ஒரு சிலரை இரவும், பகலும் உபவாசத்துடன் கூட ஜெபிக்கும் தீர்க்கதரிசிகளாக அழைத்திருக்கிறார். இதனை வாசிக்கும் உங்களின் மீதும் அவ்வாறான ஒரு அழைப்பு இருக்கலாம். ஆனால் உங்கள் வல்லமையான ஜெபங்களினால் அற்புதங்கள் நடந்தாலும் நீங்கள் மற்ற ஊழியர்களை போல பிரசித்தி பெறவில்லையே என நினைக்கலாம். ஆனால் அது உங்களின் அழைப்பாகும். நீங்கள் உங்கள் முழங்காலில் உங்கள் சபைக்காக தேசத்துக்காக ஜெபத்தில் நிற்பதற்கான பலன் உங்களுக்கு உண்டு. அதற்குரிய பலனை தேவன் பரலோகத்தில் தருவார். ஆகவே உங்களை ஒரு ஜெப தீர்க்கதரிசியாக அழைத்திருந்தால் அதை ஊக்கத்துடனும் கர்த்தரின் 2வது வருகை காணும் வாஞ்சையுடனும் அந்த ஊழியத்தை இடைவிடாது செய்வது அவசியம். மாராநாதா! சீக்கிரம் வாரும் இயேசுவே!

# 14.
# முக்கியமான ஜெபக்குறிப்புக்கள்

பிரியமானவர்களே கடைசியாக ஜெப வாழ்வை குறித்து முக்கியமான சில விடயங்களை உங்களிடம் கூற விரும்புகிறேன். உங்கள் வீடு ஒரு ஜெபவீடாக இருக்கிறதா? ஜெபம் மிகவும் வல்லமையானது. ஜெபிக்கும் குடும்பங்கள் என்றுமே நிலைக்கும் குடும்பங்கள் என ஒருவர் கூறினார். அது 100 வீதம் உண்மையாகும். ஜெபம் தேவனோடு ஒரு தொடர்பை ஏற்படுத்தி அவர் சமூகத்தை உங்கள் வீட்டிற்குள் கொண்டுவரும். ரோமர் 14:17 "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது". ஆம் பிரியமானவர்களே பரிசுத்த ஆவியானவர் உங்கள் வீட்டை தேவ பிரசன்னத்தால் நிரப்பும் போது அவர் உங்கள் வீட்டை நீதியும் சமாதானமும் சந்தோஷத்தாலும் நிரப்புவார். இன்று பலருடைய வீட்டில் கோபம், பிரிவு, அன்பு இல்லாத நிலைமை, பொறாமை, சண்டை ஆகிய காரணங்களினால் குடும்பங்கள் சமாதானமின்றி வாழ்கிறார்கள். ஆனால் அவ்வாறு வாழ்வது கர்த்தருடைய திட்டமல்ல. அவருடைய திட்டம் நிறைவான ஆசீர்வாதமே ஆகும். கர்த்தரின் நிறைவான ஆசீர்வாதத்தை பெற நமது வீடு ஒரு ஜெபவீடாக இருத்தல் அவசியம். உங்கள் குடும்பத்தில் நீங்கள் ஒருவர் மாத்திரமே விசுவாசியானால் உங்களின் குடும்பத்துக்காக நீங்கள் தினமும் தேவனே என் வீட்டை உமது பிரசன்னத்தால் நிரப்பும் என் குடும்பத்தை தொடும் என ஜெபிக்க வேண்டும். ஆனால் முழு குடும்பமும் விசுவாசிகளானால் குடும்ப ஜெபம் கட்டாயமானது. என்ன காரணத்தினாலும் குடும்ப ஜெபத்தை தடை செய்யாமல் தினமும் இடைவிடாது ஜெபியுங்கள். அப்போது நீங்கள் கர்த்தரின் நிறைவான ஆசீர்வாதத்தை உங்கள் வீட்டில் காண்பீர்கள்.

அடுத்ததாக தேசத்திற்காகவும் அதன் தலைவர்களுக்காகவும் ஜெபிப்பது அவசியமாகும். எரேமியா:29:7 "நான் உங்களை சிறைப்பட்டு போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தை தேடி அதற்காக கர்த்தரை விண்ணப்பம் பண்ணுங்கள். அதற்கு சமாதானமாயிருக்கையில் உங்களுக்கும் சாமாதானமாயிருக்கும்". தேசம் பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஆசீர்வதிக்கப்படும் போது நாமும் அதன் நன்மையை அனுபவிக்க முடிகிறது. எனவே நீங்கள் உங்கள் தேசத்திற்காக ஜெபம் செய்வது அவசியமாகும். மத்தேயு:18:19 படி அவர் நாமத்தில் இரண்டு பேர் ஒருமனப்பட்டு வேண்டிக்கொண்டால் அது எமக்கு அருளப்படும் என கூறப்பட்டுள்ளது. தேவனின் பிள்ளைகளாகிய நாம் நாட்டை ஆசீர்வதிக்கும் படியாக ஜெபித்தால் அவர் அதற்கு செவிக்கொடுப்பார். ஆகவே பாரத்தோடும் கண்ணீரோடும் தேசத்திற்காக நாம் ஜெபிக்கின்றோமா? எசேக்கியல் 22:30 கூறுவது போல நாம்

கர்த்தருக்கும் இலங்கைக்கும் இடையில் திறப்பிலே நின்று தேசத்திற்காக பாரத்தோடும் கண்ணீரோடும் ஜெபிக்க வேண்டும். 2 நாளாகமம் 7:14, நீதிமொழிகள் 11:11 படி தேசத்திற்காக ஜெபிப்பது நமது கடமையாகும்.

அடுத்ததாக நான் கூட்டு ஜெபத்தின் முக்கியத்துவத்தை விளக்க உள்ளேன். நாம் ஒன்றாக ஜெபிக்கும் ஆலயமா? அல்லது விளையாடும் ஆலயமா? இன்று சபைகளில் குடும்ப முகாம், ஒன்றுகூடல் களியாட்டங்கள் போன்ற விடயங்களுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஆகவே சபையானது தற்போது களியாட்டங்களுக்கு முக்கியத்துவதம் கொடுக்கும் சபையாக மாறி விட்டது. ஆனால் ஆதிசபையோ ஜெபிப்பதில் கவனம் செலுத்தினர். சபைகளுக்கு எதிர்ப்பு ஏற்பட்ட போது அவர்கள் என்ன செய்தார்கள்? ஜெபித்தார்கள். அப்போஸ்தலர் 12:12 கூறுகிறது பேதுரு சிறையில் இருக்கும் வேளையில் சபையோர் கூடி ஜெபித்ததால் கர்த்தர் ஒரு தேவ தூதனை அனுப்பி பேதுருவை சிறையிலிருந்து விடுவித்தார். அப்போஸ்தலர் 4:24-31 சபையோர் ஒன்று கூடி ஜெபித்தபோது ஆவியில் நிரம்பி அவர் தேவனுடைய பாஷையில் பேசினார்கள் எனப்படுகிறது. எனவே நீங்கள் சபையாக இணைந்து ஜெபிக்கும் போது அற்புதங்களை காண்பீர்கள். எனவே நாங்கள் ஜெபத்தை நமது சபைகளிற்குள் திரும்ப கொண்டு வர வேண்டும். சபை ஒன்றாக ஜெபிக்கும் போது தேசத்தில் எழுப்புதல் உண்டாமும். சபையோாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

பிரியமானவர்களே ஜெபத்தை குறித்து இன்னுமொரு முக்கியமான ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்திருப்பது அவசியம். நீங்கள் மற்றவர்களுக்காக மனதுருக்கம் நிறைந்து பாரத்துடன் கண்ணீர் விட்டு ஜெபிக்கும் போது அதை கர்த்தர் காண்கிறார். உங்கள் ஜெபத்தை கேட்டு அவர் அற்புதங்களை செய்வார். புலம்பல் 3:49-50இல் கர்த்தர் பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்க்கும் மட்டும் என் கண்கள் இடைவிடாமல் ஓய்வின்றி கண்ணீர் விட்டு ஜெபிக்கும் என கூறப்படுகிறது. ஆம் பிரியமானவர்களே நீங்கள உண்மையாக மனதுருக்கத்தினால் நிறைந்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து மற்றவர்களுக்காக ஜெபிப்பிர்களேயானால் அற்புதம் நடைப்பெறும் வரை ஓய்வின்றி ஜெபத்தில் இருப்பீர்கள். கர்த்தர் பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்க்கும போது அவரும் மனதுருகி அற்புதம் செய்வார்.

நாம் நடத்தும் சுகமளிக்கும் கூட்டங்களில் ஒரு சில நேரங்களில் கர்த்தர் மக்களுக்கு தனிப்பட்ட ரீதியில் ஜெபிக்கும் படியாய் நமக்கு கட்டளையிடுவார். அவ்வேளையில் பரிசுத்த ஆவியானவரோ மக்களின் உள்ளத்தின் ஆழத்திலிருக்கும் வேதனைகளையும் துயரங்களையும் நமக்கு வெளிப்படுத்தி அவரே நம்மை இயேசுவின் மனதுருக்கத்தினால் நிரப்பி நம்மை ஜெபிக்கும் படியாய் செய்வார். அவ்வேளைகளில் அந்த மக்களின் வேதனைகளும் துயரங்களும் நம்முடைய சொந்த வாழ்வில் இருப்பது போல் ஆவியானவர் நம்மை ஜெபிக்கும் படியாய் வழி நடத்தி கர்த்தரிடம் இருந்து பதில் வரும் வரை இடைவிடாது ஜெபிக்கும் படியாய் செய்வார். நம்மை அறியாமலே கண்ணீர்

விட்டு ஜெபிப்பது உண்டு. எபேசியர் 6:18 “எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.“

ஆம் பிரியமானவர்களே மற்றவர்களுக்காக தமது உள்ளத்தை உடைத்து ஜெபிக்கும் படியாய் கர்த்தரிடம் தமது வாழ்க்கையை ஒப்படைப்பவர்களை பரிசுத்த ஆவியானவர் தேடுகிறார். அவ்வாறு மற்றவர்களுக்காக ஜெபிப்பவர்களினூடாக கர்த்தர் பெரிய அற்புதங்களை செய்வார். சங்கீதம 51:17 இன் படி “தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.” இவ்வாறான இருதயத்தையே பரிசுத்த ஆவியானவர் தேடுகிறார். மற்றவரின் தேவைகளை நமது சொந்த தேவைப் போல் எண்ணி பாரத்தோடு இடைவிடாது அழுது ஜெபிப்போரை கர்த்தர் தேடுகிறார். ஊக்கமான ஜெபம் கேட்கப்படும். சங்கீதம் 118:5 “நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டேன். கர்த்தர் என்னை கேட்டருளி விசாலத்திலே வைத்தார்”. எனவே மற்றோருக்காக ஜெபிக்கும் போது பாரத்தோடு ஜெபிக்கும் ஆவியையும், ஊக்கமாக ஜெபிக்கும் ஆற்றலையும் இயேசுவின் மனதுருக்கத்தையும் ஆவியானவரிடம் கேளுங்கள். நீங்கள் ஊக்கமாக மனந்திரும்பி ஜெபிக்கும் போது அவர் உங்களை மறுக்கமாட்டார். லூக்கா:7:36-50 இல் பாவத்தில் வாழ்ந்த ஒரு ஸ்திரி இயேசுவினுடைய பாதங்களை கழுவி, அழுதபோது அவர் அவளுக்கு மனதுருகி அவளின் பாவம் யாவற்றையும் மன்னித்தார். அன்னாள் அழுது ஜெபித்ததினால் சாமூவேலை பெற்றெடுத்தாள். ஆகவே அவர் நம் கண்ணீரை கண்டு அற்புதம் செய்யும் தேவன். நீங்கள் மற்றவர்களுக்காக சிந்தும் கண்ணீரை கண்டு அவர் அதிசயமான காரீயங்களை உங்களினுடாக செய்வார்.

அடுத்ததாக ஊழியத்திற்கும் ஜெபத்திற்கும் இடையே இருக்கும் தொடர்பை ஆழமாக ஆராய்ந்து பார்ப்போம். ஊழியத்திற்காக நம்மை ஆயத்தம் செய்வதில் நமக்கு மிகவும் அவசியமான ஒரு ஆயுதம் ஜெபமாகும். சங்கீதம 5:1-3 இன் படி “கர்த்தாவே என் வார்த்தைகளுக்குச் செவிகொடும், என் தியானத்தைக் கவனியும். நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்; என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும். கர்ததாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.“ மேலே கூறப்பட்டுள்ள வசனங்களில் தாவீது அவனின் எதிரிகளிடமிருந்து வரும் துன்புறுத்தல்களை தாங்க முடியாமல் மிக்க வேதனையுடன் கர்த்தரை நோக்கி அழுதான். ஆம் பிரியமானவர்களே சாமுவேலால் தாவீது வாலிபனாக இருக்கும் போதே ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டாலும் மறு நாளே சிங்காசனத்தை அவன் பெறவில்லை. தாவீது அவனின் 30ஆவது வயதிலேயே அவன் ராஜாவாக சிங்காசனத்தின் மேல் அமர்ந்தான். அபிஷேகம் செய்யப்பட்ட நாளுக்கும் ராஜாவாக சிங்காசனத்தின் மேல் அமர்ந்த நாளிற்கும் இடையே குகைகளுக்குள்ளும் வானாந்தர பிரதேசத்திலும் ஒழிந்து வாழ வேண்டிய

சூழ்நிலை ஏற்பட்டது. ஏனேனில் சவுல் அவனைக் கொல்வதற்கு வகைத்தேடினான். அவனின் மற்ற எதிரிகளும் அவனைக் கொல்வதற்கு வகைத்தேடினார்கள். ஆனால் அதே நேரம் தாவீதின் தலைமையின் கீழ் ஒரு சேனை உருவாகிக் கொண்டிருந்தது. இந்த சேனையும் அவர்களுடைய குடும்பத்தாரும் தாவீதுடன் இடம் இடமாய் சென்று நாடோடிகளாக வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வளவு பிரச்சினையும் ஏன் தாவீது அனுபவிக்க வேண்டி இருந்தது? ஏன் கர்த்தர் அவரால் தேரிந்தக் கொள்ளப்பட்ட பாத்திரமான தாவீதின் வாழ்க்கையில் இத்தகைய சம்பவங்கள் நடைபெற அனுமதியளித்தார்? கர்த்தர் தாவீதை சிங்காசனத்திற்காக தயார்படுத்திக் கொண்டிருந்தார். பல தேசங்களை அரசாலுவதற்கு அவனை ஆயத்தப்படுத்திக கொண்டிருந்தார். ஆம் பிரியமானவர்களே ஊழியத்தை பெற முன்பதாக அவர் நம்மை ஆயத்தம் செய்யும் பாதையினூடாக கொண்டு செல்லுவார். அக்காலமானது குகைகளுக்குள்ளும் வானாந்தர பிரதேசத்திலும் வாழ்வதை போல நமக்கு தோன்றும். கர்த்தர் நம்மை தாவீதை போல பல சோதனைகளுக்கூடாக கொண்டு செல்வார். ஏனெனில் என்ன வந்தாலும் நாம் கர்த்தருக்கு உண்மையாக இருப்போம் என்பதை அறியவே நம்மை அவ்வாறான கஷ்டத்தின் பாதையினூடாக கொண்டு செல்லுகிறார். தாவீதை பாருங்கள்; என்ன கஷ்டம் வந்தாலும் அவன் தேவனை விட்டு விலகவுமில்லை பின்வாங்கி செல்லவுமில்லை. எல்லா சூழ்நிலைகளிலும் அவன் கர்த்தரின் முகத்தை தேடி அவரை இறுக்க பிடித்து வெற்றி கொண்டான். ஆம் பிரியமானவர்களே உங்களின் வாழ்க்கையின் மேல் ஊழியத்திற்கான அழைப்பு இருக்கக்கூடும். ஆனால் தாவீதை போல அந்த சோதனையின் நேரத்தில் கர்த்தரின் முகத்தை தேடி அவரை இறுக்க பிடிக்காதிருந்தால் அந்த அழைப்பை இழக்கக்கூடிய வாய்ப்பு உருவாகக்கூடும். ஆனால் அந்த சோதனையின் நேரத்தில் நாம் ஜெபத்தில் கர்த்தரை தேடும் போது கர்த்தர் நம்மை வழிநடத்தி ஜெயம் கொள்ளும் படியாக செய்வார். ஆகவே நாம் ஊழியத்திற்கென ஆயத்தப்பட ஜெபம் என்பது நம் வாழ்க்கைக்கு மிக முக்கியமாக இருக்கிறது.

அப்போஸ்தலர் 1:14இன் படி “அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரிகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.“ ஜெபம் என்பது ஊழியம் செய்பவர்களுக்கும் ஊழியம் செய்ய விருப்பமுள்ளவர்களுக்கும் மிகவும் அவசியமான ஒரு அம்சம் ஆகும். பிசாசானவன் தேவனுடைய பிள்ளைகளை தாக்குதல் செய்ய நினைக்கும் போது முதலாவதாக குறிவைப்பது ஜெப வாழ்க்கையை தடை செய்து நிறுத்துவதே ஆகும். ஏனெனில் ஜெபம் நம்முடைய ஆவிக்குரிய மனுஷனை தேவனோடு நெருங்கி நடக்கச் செய்து நம்மை பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்தலின் படி வாழ செய்கிறது. ஆகவே நாம் ஆவியானவரின் வழி நடத்தலின் படி வாழும் போது பிசாசானவன் நம்மை தொட முடியாது. நமது வாழ்க்கையில் ஜெபம் இல்லாவிடின் நாம் மாம்சத்தின் வழி நடத்தலின் படியே செல்வதால்

பிசாசானவன் நம்மை தொட முடிகிறது.

அப்போஸ்தலர் 1ஆம் அதிகாரத்தில் இயேசு பரலோகத்திற்கு எடுத்துகொள்ளப்பட்ட பின்பு சீஷர்கள் மற்றும் அவரை பின்தொடர்ந்தவர்கள் ஒன்று கூடி தொடர்ந்து ஜெபித்தார்கள். மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது தேவைகள் இருந்தால் மட்டுமே ஜெபிக்கும் ஜனமாக அல்லாமல் தொடர்ந்து இடைவிடாது ஜெபிக்கும் ஜன கூட்டமாக இருந்தார்கள். இயேசு பரலோகத்திற்கு எடுத்துகொள்ளப்பட முன்பு அப்போஸ்தலர் 1:4 மற்றும் 8ஆம் வசனங்களில் பின்வரும் வாக்குத்தத்தை தந்தருளினார் - “யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவினாலே ஞானஸநானம் பெறுவீர்கள். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குமச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்“.

இயேசு, பரிசுத்த ஆவியானவரும் அவருடைய வல்லமையையும் பற்றிய வாக்குத்ததத்தையும் உலகத்தை அசைக்கும் ஊழியம் பற்றிய வாக்குத்ததத்தையும் சீஷர்களுக்கும் அவரை பின் தொடர்ந்தவர்களுக்கும் தந்தருளிய பின்பே பரலோகத்திற்கு எடுத்துகொள்ளப்பட்டார். இதனை தொடர்ந்து நடந்த சம்பவங்கள் யாவும் மீது ஊழிய வாஞ்சையிருக்கும் நம் யாவரும் நன்றாக கவனம் செலுத்த வேணடும். சீஷர்களும், இயேசுவை பின்தொடர்ந்தவர்களும் பரிசுத்த ஆவி கிடைக்கும் வரை விசேஷசமான ஒன்றை இடைவிடாது செய்தார்கள். இயேசு அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் வரும் வரை இன்று தொடக்கம் ஒரு காரியத்தை செய்யும் படி கூறினார். அவர் வாக்குத்ததம் நிறைவுபெறும் வரை காத்திரு என்றார். கர்த்தர் “காத்திரு“ என்று கூறும் போது அதன் அருத்தம் ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதல்ல. ஏசாயா 40:31 படி “கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்”. எனவே காத்திருப்பது என்பது கர்த்தரின் சந்நிதானத்தில் இருந்து ஜெபத்தில் அவரின் முகத்தை தேடுதல் ஆகும். தினமும் அவரை துதித்து ஆராதனை செய்து நன்றி கூறுவதே அவருக்காக காத்திருத்தல் என்பதாகும். இதுவே ஊழியத்திற்கான முன் ஆயத்தமாகும்.

மதிப்புக்குரியவரும் அன்புக்குரியவருமாகிய போதகர் டீ.ஜி.எஸ்.தினகரன் அவர்கள் கர்த்தரால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டார். அவர் அடிக்கடி சொல்லும் ஒரு சாட்சி 7 வருட காலமாக எவ்வாறு பரிசுத்த ஆவியின் வரத்திற்கு ஜெபத்தில் காத்திருந்தார் என்பதை பற்றிய சாட்சியாகும். அவர் பரிசுத்த ஆவியானவரின் வரத்தை பெற்றும் அவர் தொடர்ந்து ஜெபித்ததினால் ஒரு நாள் அவர் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விடியற்காலை 5 மணிக்கே மறுபடியும் திரும்பினார். ஆமேன்! ஜெபம் வல்லமையானதும் ஊழியத்திற்கு மிக முக்கியமானதொன்றாகும். எனக்கருமையான காலஞ்சென்ற என் தந்தை போதகர் லான்ஸ்லொட் டெனியல்ஸ் 1985 இல் போதகர் தினகரிடம் ஊழிய தரிசனத்தை பெற்று கொண்டார். ஆனாலும் அந்த

தீர்க்கதரிசனம் நிறைவேற 10 வருடமாக எனது அப்பா காத்திருந்தார். அவ்வாறு காத்திருக்க வேண்டிய காலத்தில் அவர் இடைவிடாது உபவாசம் செய்து தினமும் ஜெபத்தில் கர்த்தரின் முகத்தை தேடினார். கஷ்டக் காலங்கள் வந்தது, பல சோதனைகளினுடாக செல்ல வேண்டியிருந்தது. ஆனாலும் அவர் கர்த்தரை இறுக்க பிடித்து ஜெபத்தில் இருந்ததால் 1994 ஆம் ஆண்டு இயேசு இரட்சகர் சுவிசேஷ ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு பெரிதாகி இன்று ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது.

பிரியமானவர்களே சீஷர்கள் ஒன்று கூடி ஜெபித்து கர்த்தருக்காக காத்திருந்தப்படியால், அப்போஸ்தலர் 2:2-4இல் அவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியானவரால் நிறப்பப்பட்டார்கள். பரிசுத்த ஆவியானவரின் வருகையின் நாளையோ நேரத்தையோ கர்த்தர் அவர்களுக்கு செல்லவில்லை. பரிசுத்த ஆவியானவரின் வருகைக்கு காத்திருக்கும் படி மட்டுமே கூறினார். அப்போஸ்தலர் 1:7இல் இயேசு அவர்களை நோக்கி "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்தல்ல" என்று கூறினார். இதனை கேட்ட சீஷர்களும், இயேசுவை பின்தொடர்ந்த மற்றவர்களும் என்ன செய்தார்கள்? அவர்கள் சாதாரணமாக தங்கள் சொந்த வேலைகளின் மீது கவனம் செலுத்திக்கொண்டு பரிசுத்த ஆவியானவர் வரும் வரை நேரத்தைக் கடத்திக்கொண்டு இருந்தார்களா? இல்லை அவர்கள் யாவரும் ஜெபத்தோடு காத்திருந்ததால் ஆவியிலே நிரப்பப்பட்டார்கள். ஆனால் இன்று உள்ள தேவபிள்ளைகளோ ஜெபத்தில் காத்திருக்க விரும்பாததால் பின்வருமாறு நடைபெற வேண்டுமென நினைக்கிறார்கள். காலையில் தூதன் எக்காளம் ஊதி இன்று பெந்தகொஸ்தே நாள் என்று அறிவிக்க யோவான் ஓடி மீன் பிடிக்க சென்ற பேதுருவை அழைக்க வேண்டியிருந்தது. யாக்கோபு விடுமுறைக்கு வெளிநாட்டுக்கு சென்று இருந்தப்படியால் தந்தி அனுப்பி அவனை அழைக்க வேண்டியிருந்தது. பிலிப்பு, வங்கிக்கு சென்ற மத்தேயுவை அழைக்க சென்றார். யாவரையும் அழைத்து வந்த பின்பு தான் ஒன்றாக கூடி பின்பு யாக்கோபு ஆராதனை செய்ய, யோவான் பிரசங்கித்து ஜெபிக்க ஆராதனை முடிந்து பேதுரு மீனும், பாணும் சாப்பிடும் படியாக கொடுத்து ஜாலியா வீண் பேச்சு பேசி பின்பு வீட்டுக்கு சென்றார்களாம். நான் இதை வேடிக்கைக்கு தான் சொன்னேன். ஆனாலும் இன்று தேவபிள்ளைகள் இப்படி தான் தங்கள் ஆராதனைகளை நடத்துகிறார்கள். ஜெப ஆராதனையை விட அது ஒரு விருந்தினர் கூட்டம் போல் தான் ஆராதனைகளை நடத்துகிறார்கள். ஆகையால் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மத்தியில் அசைவாடுவதில்லை. சீஷர்களும், இயேசுவை பின்தொடர்ந்த மற்றவர்களும் ஒன்று கூடி ஜெபத்தில் இருந்தப்படியால் முன்அறிவித்தல் எதுவும் இன்றி பெந்தகொஸ்தே நாள் வந்தப்போது அவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பட்டார்கள்.

பிரியமானவர்களே நான் யாரையும் குற்றப்படுத்தவில்லை. ஆனால் இன்று இதுவே சபைகளின் நிலை. இலங்கை சபைகள் இவ்வாறு இயங்குவது கவலைக்கிடமானதொன்று. உங்கள் வாழ்க்கை வல்லமையாக மாற

வேண்டுமானால் நீங்கள் கர்த்தருக்கென காத்திருந்து ஜெபிக்க வேண்டும். அன்று பெந்தகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானால் நிறைந்ததால் தோமா சுவிசேஷத்தை ஏந்தி இந்தியா வரை வந்து மற்றும் ஆசியா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களிலும் சுவிசேஷம் பரவி இன்று உலகம் முழுவதும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பிரியமானவர்களே உங்கள் ஜெபவேளையை எதுவும் தடை செய்யாதபடிக்கு நீங்கள் அனுதினமும் கர்த்தர் சமூகத்தில் காத்திருந்து அவர் வாக்குப் பண்ணிய வல்லமையை பெற்றுக்கொள்ளுங்கள்.

# 15.
# சகல மகிமையும் அவருக்கே உண்டாவதாக

**மத்தேயு 6:13 “ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமென்”.**

பிரியமானவர்களே இந்தப் புத்தகத்தை வாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் உங்களை தொட்டு அவரின் அபிஷேகத்தால் நிரப்பியிருப்பார் என நான் நம்புகிறேன். ஆம் பிரியமானவர்களே இந்த கடைசி காலத்தில் யோவேல் 2:28-29இல் கூறியபடி கர்த்தர் உங்களை வல்லமையாக உபயோகிக்க விரும்புகிறார். ஆனால் அவ்வழைப்பிற்கு மதிப்பளிப்பது எமது கடமையாகும். யோவான் 14:12படி அவர் செய்த அற்புதங்களையும் விட நாம் பெரிய காரியங்களை செய்வோம் என்று நம் இயேசு நாதர் கூறியுள்ளார். அவ்வாறு கூறக் காரணம் அவர் பிதாவிடம் சென்று பரிசுத்த ஆவியானவரை நமக்கு தந்திருப்பதாலே ஆகும். பரிசுத்த ஆவியானவர் நம் மீது வரும் போது நாம் வல்லமையை பெறுவோம் என்று அப்போஸ்தலர் 1:8 கூறுகிறது. ஆகவே நீங்கள் இப்புத்தகத்தில் கற்றுக்கொண்டது போல பரிசுத்த ஆவியானவரோடு ஒரு நெருங்கிய உறவை வைத்திருப்பதற்கு ஜெபம் உதவி செய்கிறது. மேலும் பரிசுத்த ஆவியானவர் நமது மாம்சத்தை கட்டுப்படுத்தி ஆவியின் வழிநடத்திலினூடாக தினமும் நடப்பதற்கு உதவுகிறார். 2 கொரிந்தியர் 3:18 படி எம்மை அவருடைய சாயலாக மாறுரூபப்படுத்துகிறார்.

இந்த புத்தகத்தை நிறைவு செய்ய முன்பதாக நான் ஒரு முக்கியமான விடயத்தை கூற விரும்புகிறேன். என் தந்தை எப்போதும் ஊழியத்தை குறித்து ஒன்றை திரும்பவும் திரும்பவும் நினைவூட்டுவார். அது என்ன என்றால் எமது ஆரம்பத்தைவிட எமது முடிவு மிகவும் நன்றாக இருக்க வேண்டும். நமது வாழ்க்கை பயணத்தின் முடிவுக்கு வரும் போது முடிவிலே நல்ல போரட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்று கூறக்கூடியதாக இருக்க வேண்டும் (2 தீமோத்தேயு 4:7). பவுல், அப்போஸ்தலர் 20:24இல் இவ்வாறாக கூறுகிறார் “ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்து கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.“

யூதாஸ் ஸ்கரியோத்துக்கும், பவுலுக்கும் இடையே இருந்த வித்தியாசம் என்ன என்றால் ஒருவர் ஆரம்பத்தை சிறப்பாக தொடங்கி முடிவை பிழையாக முடித்தார். ஆனால் மற்றவரோ ஆரம்பம் சிறப்பற்றதாக இருந்தாலும் முடிவு மகிமை நிறைந்த முடிவாக இருந்தது. பவுல் கிறிஸ்தவர்களை நிந்திப்பவனாக

முதலில் காணப்பட்டாலும் அவர் பின்பு கிறிஸ்துவின் பிரதான அப்போஸ்தலனாக தனது வாழ்க்கை பயணத்தை முடிவுச் செய்தார். யூதாஸ் ஸ்காரியோத் இயேசுவின் சீஷனாக தொடங்கி இறுதியில் காட்டிக்கொடுப்பவனாகினான். மேற்கூறிய வசனத்திலே பவுல் தனது ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிப்பதும் இயேசுவிடமிருந்து பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவதுமே அவனின் வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும் என்று கூறுகிறார். பவுல் அவனுடைய வாழ்கையை தொடங்கும் போது அவனுக்கு பெரிய ஆரம்பம் இல்லை. அவன் கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிறவனாகவே இருந்தான். ஆனால் தமஸ்குக்கு செல்லும் வழியில் கர்த்தர் அவனைத் தொட்டு இரட்சித்தார். அதற்குப்பின் பவுல் ஆரம்பத்தில் ஊழியத்தை செய்யும் போது அவனுக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஏனெனில் மற்ற அப்போஸ்தலர் பவுலின் பழைய வாழ்க்கையின் காரணமாக பயத்தினால் நிறைந்தும் கர்த்தர் இத்தகைய குறுகிய காலத்தில் இப்படியான கொடிய மனிதனை மாற்றி பாவிப்பாரா என்ற சந்தேகத்தோடும் நிறைந்தும் காணப்பட்டப்படியால் அவர்கள் பவுலை ஆரம்பத்திலே ஊழியக்காரனாக ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் பவுல் பல தடவைகள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாத ஜனங்களினால் துன்புறுத்தப்பட்டு, நொருக்கப்பட்டு, சிறையிலும் அடைக்கப்பட்டார். ஆனாலும் பவுல் ஊழியம் செய்வதை நிறுத்திவிடவில்லை. இயேசு நாதர் அவனுக்கு தந்த சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றிய பின் பரலோகம் செல்வதே அவனின் ஒரே ஒரு நேக்கமாக இருந்தது.

பல ஊழியர்கள் பெரிய ஆரவாரத்துடன் அவர்களின் ஊழியங்களை ஆரம்பிப்பது உண்டு. அவர்களின் கூட்டங்களுக்கு ஜனங்கள் திரண்டு செல்வார்கள். அவர்களின் ஊழியம் மிகவும் பிரபலமான ஊழியமாய் இருக்கும். ஆனால் பாதி வழியில் ஆவி, அபிஷேகம் எல்லாம் தனித்துவிடும். ஏன்? காரணம் அவர்களோ அவர்களின் கண்களை கர்த்தரிடத்திலிருந்து எடுத்துவிட்டு பணம், செல்வம், பின்னால் செல்லத் தொடங்கிவிட்டார்கள். மேலும் ஒழுக்கமற்ற முறைகளில் அவர்களின் வாழ்க்கை செல்ல ஆரம்பித்துவிட்டது. எனவே தான் பவுல் இவ்வாறு கூறுகிறான் “என் வாழ்கை எனக்கு பெறுமதியற்றது”. ஆம் நண்பர்களே நாம் கர்த்தரை சேவிக்கும் போது அது எம்மைப்பற்றியதல்ல அவரே யாவும் ஆனவர். அவருக்கே முதல் இடம் கொடுப்பது அவசியம். எனவே உங்கள் முழு ஊழியமும் 2 தீமோத்தேயு 4:7 படி நல்ல போராட்டத்தை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தை காத்துக்கொண்டேன் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும். ஊழியம் பணம் உழைக்கவோ, கட்டிடம் கட்டவோ, பிரசித்தி பெறவோ இல்லாமல், அவருடைய ராஜ்யத்திற்கு ஆத்மாவை ஆதாயப்படுத்தி பவுல் கூறுவதைபோல அவர் கிருபைக்கு சாட்சியிடுகிறதாய் முடிவு வரை இருக்கவேண்டும்.

நண்பர்களே நீங்கள் ஊழியத்திலிருந்தால் வாழ்க்கை என்னும் ஓட்டத்தை நன்றாய் முடித்து கர்த்தர் தந்திருக்கும் ஊழியப் பணியை உண்மையாய் செய்து நிறைவேற்றுவதே உங்கள் ஓரேயொரு இலக்காக இருக்க வேண்டும்.

அநேகர் ஓட்டத்தை முடிக்கிறார்கள் ஆனால் இலக்கை அடைவதில்லை. ஏனெனில் ஊழிய பாதையின் நடுவில் அவர்கள் மாம்சத்தின் இச்சைகளுக்கும் உலகின் புகழுக்கும் இடம் கொடுத்து விட்டதால் சரியான பாதையை விட்டு விலகி சென்றுவிட்டார்கள். ஆகையால் அவர்கள் ஓட்டத்தை முடிக்கும் போது நித்திய ஜீவன் எனும் வரனையும் இழந்து கடைசியில் நரகத்தில் முடிவடைகிறார்கள். எனவே நண்பர்களே நம் யாவருக்கும் கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட ஒரு இலக்கு அல்லது நோக்கம் நிறைவேற்றும் கடமை நமது வாழ்கையில் உண்டு. இதுவே கர்த்தரின் சித்தம் ஆகும். இவ் இலக்கை நமது சுயநலம் பாராது நிறைவேற்ற வேண்டும். கர்த்தரின் சித்தத்தை நிறைவுச் செய்து வாழ்க்கை என்னும் ஓட்டத்தை மகிமையிலே முடிவு செய்து எலியாவை போல நாமும் மகிமையுடன் பரலோகம் சென்று அடைய வேண்டும்.

இவ்வாறாக மகிமையுடன் நிறைந்த ஒரு முடிவை காண வேண்டும் என்றால் நாம் யாவருக்கும் இருக்க வேண்டிய மிகவும் அவசியமான ஒரு குணாதிசயம் ஒன்று உண்டு. அதைப்பற்றியே இப்போது உங்களுக்கு விளக்கப் போகிறேன். பிரியமானவர்களே நமது அன்பு நிறைந்த பிதாவாகிய இயேசு நமக்கு கற்று தந்த ஜெபத்தை பின்வரும் வாக்கியத்தை கூறி நிறைவு செய்கிறார் - “ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே”. ஆம் பிரியமானவர்களே சகல துதியும் மகிமையும் அவருக்கு மாத்திரமே உரியது. அவருடைய கிருபையினாலே நாம் நன்மைக்குரிய யாவற்றையும் பெற்று அனுபவிக்கிறோம் (1கொரிந்தியர் 15:10). நாம் செய்யும் ஊழியம் கூட அவரால் அருளப்பட்டவையே. யோவான் 3:27இன் படி “பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்மாட்டான்.“ நம் ஊடாக வெளிப்படும் வல்லமையானது அவருடையது எம்முடையதல்ல (ரோமர் 8:11). எனவே நமது அனைத்தும் அவருடையது. அவரில்லாமல் ஒன்றும் முடியாது. நம்மை குறித்து பெருமைப்பாராட்ட ஒன்றுமே இல்லை. ரோமர் 11:36 கூறுவது போல “சகலமும் அவரால் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது”. ஆகவே அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. எனவே பேதுரு பின்வரும் வசனத்தில் கூறுவதைப் போல நாமும் செய்ய வேண்டும்.

1 பேதுரு 5:5-6 “நீங்களெல்லாரும் ஒருவொருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.“

மனத்தாழ்மை என்றால் என்ன? இதனை விளக்கப்படுத்த பேதுரு கிரேக்க மொழியில் பயன்படுத்திய வாக்கியம் “டெப்பினோஸ்பரோசைன்” ஆகும். இந்த கிரேக்க வாக்கியத்தின் மொழி பெயர்ப்பானது நாம் நம்மை பற்றிய சரியான மதிப்பீட்டை கொண்டிருக்க வேண்டும். அதாவது நீங்கள் உங்களை பற்றி உயர்வாக பெருமையினால் நிறைந்து நினையாமல், பிலிப்பியர் 2:3-5 கூறுவது போல “ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல்,

மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.“ இந்த வசனத்தின் படி தாழ்மையாக இருப்பதற்கு பின்வரும் 4 விடயங்கள் நமது வாழ்வில் வெளிப்படுதல் அவசியம்.

1) ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாதீர்கள் - நீங்கள் எதையாகிலும் செய்யும் போது உங்கள் பெருமைக்கோ உங்கள் பிரசித்திக்கோ செய்யாமல் தேவனுடைய மகிமைக்கென செய்யுங்கள். நாம் செய்யும் எல்லா காரியங்களிலும் அவரின் நாமம் மாத்திரமே உயர்த்தப்பட வேண்டும்.

2) மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள - இந்த வசனம் கூறுவது என்னவென்றால் நாம் மற்றவர்களுக்குரிய மரியாதையை நாம் செலுத்தவது அவசியம். 1 பேதுரு 5:5 “இளைஞர்களே மூப்பர்களுக்கு கீழ்ப்படியுங்கள்” என்று கூறுகிறது. 2 தீமோத்தேயு 2:24 இன் படி “கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்.“ ஆம் பிரியமானவர்களே நாம் எவரையும் கீழ்த்தரமான விதத்தில் நினைக்கக் கூடாது. எல்லோரிடமும் வேறுபாடின்றி மரியாதையுடன் கூட நடந்து கொள்வது மிகவும் அவசியம்.

3) அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக - மற்றவர்கள் நம்பிக்கை வைத்திருக்கக் கூடிய, கஷ்டக் காலத்தில் உதவிப் பெறக்கூடிய ஒரு நபராக நீங்கள் எப்போதும் இருக்க வேண்டும். ரோமர் 14:19 கூறுவது போல் நாம் எப்போதும் சமாதானத்தை பராமரிப்பவர்களாகவும் மற்றவர்களை தைரியப்படுத்துகிறவர்களாகவும் இந்த உலகத்தில வாழ்வது அவசியம். மற்றவர்கள் கஷ்டக் காலத்திற்குள் செல்லும் போது அந்த பிரச்சனை நமக்கு இருந்தால் நாம் எப்படி இருப்போமோ என்பதை நினைவு கூறி மற்றவர்கள் மீது அன்பும் இரக்கமும் காட்டுவது மிகவும் அவசியம். என் காலஞ்சென்ற தந்தை தொலைபேசியை ஒரு நிமிடம் கூட அணைத்து வைக்க விடமாட்டார். விடியற்காலை 2 மணிக்கு கூட தொலைபேசி அடித்தாலும் நாம் பேசி மக்களுக்கு ஜெபிப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று எப்போதும் கூறுவார். ஆம் பிரியமானவர்களே எப்போதும் மற்றவர்களின் கண்ணீரை துடைக்கின்ற பாத்திரமாக பாவிக்கப் பட நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

4) கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது ஆம் பிரியமானவர்களே இயேசு கிறிஸ்துவின் அன்பும் மனதுருக்கமும் உங்கள் சொல்லிலும், செயலிலும் எப்போதும் என்றும் இருக்க வேண்டும்.

மேற்கூறிய நான்கு மனப்பான்மைகளும் நமது மனதில் வேரூன்றி நமது

நடத்தையில் வெளிப்படும் போது மட்டுமே கர்த்தர் நம்மை தாழ்மையுள்ளவர்களாக கருதுகிறார். அவ்வாறு நாம் தாழ்மையுடன் நடக்கும் போது கர்த்தர் நம்மை ஏற்றகாலத்திலே உயர்த்துவார். ஆனால் நீங்கள் பெருமைக்கு உங்கள் வாழ்கையில் இடம் கொடுத்தால் ஒரு பெரிய அழிவை எதிர்கொள்ளுவீர்கள் என்பதை பின்வரும் வசனங்கள் எடுத்துக் கூறுகிறது.

தானியேல் 5:20 “அவருடைய (நேபுகாத்நேச்சார்) இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே, கடினப்பட்டபோது அவர் தமது சிங்காசனாத்திலிருந்து தள்ளப்பட்டார்; அவருடைய மகிமை அவரை விட்டு அகன்றுபோயிற்று”. நீதிமொழிகள் 18:12 “அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இருமாப்பாயிருக்கும். மேன்மைக்கு முன்னானது தாழ்மை”. நீதிமொழிகள் 11:2 “அகந்தை வந்தால் இலச்சையும் வரும். தாழ்ந்த சிந்தனையுடையவர்களிடத்தில் ஞானம் உண்டு” நீதிமொழிகள் 16:5 “மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். கையோடே கைகோத்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான்.“ நீதிமொழிகள் 16:18 “அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை”. ஒபதியா 1:3-4 “கன்மலை வெடிப்புகளாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம் போக்கிறது. நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சந்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாா்”

ஆகவே பிரியமானவர்களே கடைசியாக நான் ஒரு முக்கிய வசனத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்தி இந்த புத்தகத்தை முடிவுக்கு கொண்டு வருகிறேன். மத்தேயு 18:3-4 இல் இயேசு கூறுகிறார் “நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். ஆகையால் இந்த பிள்ளைகளைப் போலத் தன்னை தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்.“

பிரியமானவர்களே நாமும் எம் பரலோக பிதாவின் முன்னிலையில் ஒரு சிறு பிள்ளையை போல் இருந்து அவர் கூறும் வார்த்தையின் மீது நம்பிக்கை வைத்து அவருக்கு நன்றி செலுத்தி அவரின் கையை மாத்திரம் பிடித்து தினமும் நாம் நடக்க வேண்டும். பவுல் 1 கொரிந்தியர் 15:10இல் கூறுவது போல “நான் பெற்ற ஆசீர்வாதம் யாவும் உம் கிருபையினாலே மட்டுமே” என்று நாமும் கூறுவோம். நமது வாழ்க்கை பயணத்தை நன்றாக முடித்து எலியாவை போல நாமும் அக்கினி ரதத்திலே பரலோகம் சென்று நம் இயேசவுடன் சதாகாலமும் அவரோடு இருப்பதே நம் வாழ்வின் ஒரே ஒரு நோக்கமாக இருக்கவேண்டும். நான் உங்களுக்காக இப்போது ஜெபம் செய்து இப்புத்தகத்தை நிறைவு செய்கிறேன்.

அன்பின் இயேசுவே இப்புத்தகத்தின் வாசகர்கள் ஒவ்வொருவரையும் உம் கிருபையின் சிங்காசனத்திற்கு கொண்டு வருகிறேன். இதை வாசிக்கும் போதே

நீங்கள் அவர்களை தொட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பி, தீர்க்கதரிசியின் அபிஷேகத்தால் அபிஷேகித்து, வரும் நாட்களில் அவர்களை வல்லமையாக உபயோகிக்க போவதற்காக நன்றி. பிதாவே உங்கள் முன் எப்போதும் தாழ்மையுடன் நடப்பதற்காக ஒரு சிறு பிள்ளையின் மனதை போல் யாவரின் இருதயங்களை இப்போதே மாற்றுமையா. அப்பொழுது நீர் அவர்களை உயர்த்தி பேதுரு, பவுலைப்போல ஊழியத்தில் பாவிக்கப்போகிறதற்காக நன்றி அப்பா. நான் உம்முடைய பரிசுத்த நாமத்தினால் இவர்களை ஆசீர்வதிக்கிறேன். நீர் இரண்டாவது முறையாக வரும்வரை உம்முடைய தயவு இவர்களுடன் கூட இருப்பதாக. இந்த ஜெபத்தை கேட்டு பதில் தந்தமைக்காக உமக்கு நன்றி ஆமென். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.“

**ஜெபிப்பதற்கு கற்றுத்தாரும் கர்த்தாவே என்னும் இந் நூலானது, வல்லமை மிகுந்த ஜெப வாழ்வொன்றிற்குரிய அடித்தாளத்தினை உருவாக்கின்றது. இந்த நூலின் வாயிலாக ஜெபத்திற்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வது மற்றும் அதற்கென்று அவசியமாயிருக்கும் ஆவிக்குரிய ஆயதங்களைக் குறித்தும் பல முக்கியமான சத்தியங்களை வெளிப்படுத்தி விளக்காமாய் கூறுகிறது. இந்நூலானது ஏற்கனவே 2014இல் அதன் முதலாம் வெளியீட்டின் மூலமாய் ஆயிரக் கணக்கான மக்கள் இதனை வாசித்து ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வெளியீடானது இந்நூலின் இரண்டாம் மறுபதிப்பாகும்.**

**ஊழியத்தை பற்றி**

இயேசு இரட்சகர் சுவிசேஷ ஊழியங்கள், இலங்கை என்னும் தேசத்தின் எல்லா பாகங்களிற்கும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை கொண்டுச் செல்லுகின்றதான ஒரு சுவிசேஷ ஊழியமாகும். இலங்கையிலிருக்கும் எல்லா சபைகளோடும் சேர்ந்து இலங்கையில் பல இடங்களிலே சுவிசேஷ சுகமளிக்கும் விடுதலை கூட்டங்களை நடத்துவதும் மூலம் தேவனின் வார்த்தையை போதித்தருளுகிறது. கொழும்பில் எங்கள் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் 1ஆம், 2ஆம் மற்றும் கடைசி சனிக்கிழமைகளில் வேதாகம இல்லம், 4ஆம் மாடி, 293 காலி வீதி, கொழும்பு 3இல் காலை 10 மணிக்கு நடாத்தப்படுகின்றது. உங்களை இக்கூட்டங்களில் கலந்துக் கொள்ளும்படியாக அன்புடன் அழைக்கின்றோம். இக்கூட்டங்களின் மூலமாக நீங்கள் சுகத்தையும், விடுதலையையும், அபிஷேகத்தையும் பெற்று ஆவிக்குரிய ரீதியில் போஷிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**இயேசு இரட்சகர் சுவிசேஷ ஊழியங்கள்,**
தபால் பெட்டி எண் 48, கல்கிசை, 10370 இலங்கை.
மின்னஞ்சல்: jsemdaniels@gmail.com

தினமும் தேவ செய்திகளை பெற்றுக்கொள்ளவும், ஒடியோ அல்லது வீடியோ மூலமான பிரசங்கங்களை பெறவும் பின்வரும் ஊடகங்களின் மூலமாக ஊழியத்தோடு தொடர்புக் கொள்ளவும்
www.jesussaviour.lk
www.facebook.com/JesusSaviourEvangelicalMinistries
www.youtube.com/jsemsrilanka